Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

சகல நிகழ்வுகளுக்கும் ராசியான ஸ்தாபனங்கள்

மகாராசி சில்க்ஸ்



ரோசி சில்க்ஸ்

T.P.-0777 286247

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 30 (12.01.2005) புதன்கிழமை இதழ்: 104

# தமிழ் மக்களுக்கு சர்வதேச உதவிகள் கிடைப்பதைத் தடுக்கின்றார் சந்திரிகா!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

நம்பிக்கையற்றிருந்த சமாதான முயற்சிகள் மீண்டும் துளிர்க்கும் என்ற நம்பிக்கைகளைச் சிதறடிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

அனைத்து உதவிகளும் வழங்கப்படுவதாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா – இன்னொரு புறத்தில் தமிழ் மக்களுக்கு எந்த உதவிகளும் கிடைக்கவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார் என்று அரசாங்கம் மீது குற்றம் சாட்டியுள்ள விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கனடியப் பிரதமர் தமிழ்ப் பகுதிகளை வந்து பார்வையிடவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச ஊட கங்களுக்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 161 சடலங்கள் 24 மணி நேரத்தில் மீட்பு!


(கொழும்பு)

கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 161 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து நாடு முழுவதும் சுனாமியால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 882 ஆக உயர்ந்திருப்பதாக அரசாங்கத்தின் தேசிய பேரழிவு முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் பேச்சாளரான வெற்றியாராய்ச்சி இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்ரபோல் செயலர் இலங்கைக்கு விஜயம்!



(கொழும்பு)

சர்வதேச பொலிஸான இன்ரபோலின் பொதுச் செயலர் ரொனல் நொபெல் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அவருடன் குழு ஒன்றும் இலங்கையை வந்தடைந்தது. இதே வேளை ஸ்பானிய வெளியுறவு அமைச்சர் மிகேல் எஜேயும் நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

சுனாமி கடற்கொந்தளிப்பின் போது உயிரிழந்தவர்களின் சடலங்களை இனங்காண்பது தொடர்பான விசாரணைகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக இன்ரபோலின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

சுனாமி கடற்கொந்தளிப்பினால் அழிவடைந்துள்ள காலிப் பிரதேசத்திற்குச் சென்றிருந்த இன்ரபோலின் செயலாளர் நாயகம் காலி நகரம், மற்றும் காலித் துறைமுகம் என்பவற்றைப் பார்வையிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அனுப்பும் படைகளின் தொகையை குறைத்தது அமெரிக்கா!

(கொழும்பு)

சுமார் இரண்டாயிரம் படையினரை இலங்கையில் மீட்பு மற்றும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா அனுப்பத் திட்டமிட்டிருந்தபோதும் -

இந்தத் தொகையைக் குறைப்பதற்கு முடிவுசெய்திருப்பதாக இலங்கையில் நடவடிக்கைகளில் ஈடுபடும் அமெரிக்கப் படைகளுக்கான கட்டளை அதிகாரியான கேணல் தொமஸ் கொலின்ஸ் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் வைத்து சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாம் இங்கு இராணுவ ரீதியாகத் தடம்பதிக்க வரவில்லை. ஏனெனில் எமது உதவிப் பணிகளானது இராணுவ நடவடிக்கைக்கான தோற்றப்பாடாக இருப்பதாக மற்றையவர்கள் நினைக்கக்கூடாது. நாம் இங்கு வந்தது மனிதாபிமானப் பணிகளுக்காகத்தான். எனவே நாம் எமது படையினரின் அளவைக் குறைக்கவுள்ளோம்.

அமெரிக்காவின் உதவிப் பணிகளானது முடிவற்றது. எமக்கு மேலதிகமாகப் படையினர் தேவையேற்படின் மீள அவர்களை இங்கு கொண்டுவருவோம். தேவையற்ற நேரத்தில் எமக்கு மேலதிகமான படையினர் தேவையில்லை.

இலங்கையின் மேலால் ஒவ்வொரு முறையும் நாம் பறப்பினை மேற்கொள்ளும்போது இலங்கை அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

## திருமலை கட்டளைத் தளபதியுடன் புறூவ் ஹொவ்டே நாளை சந்திப்பு!

(திருகோணமலை)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டே விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை நாளை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பு சம்பூரிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதியாக கேணல் சொர்ணம் நியமிக்கப்பட்டதையடுத்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் அவர் நடத்தவுள்ள முதற்சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ரூபாவின் மதிப்பு தொடர்ந்தும் அதிகரிப்பு!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தையடுத்து இலங்கைக்கு பெருமளவிலான வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைத்து வருவதால் ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் அடுத்துவரும் நாட்களில் இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிக்கும் என மத்திய வங்கி ஆளுநர் சுனில் மென்டிஸ் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியில் உள்ள சுனாமி நிவா


(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு இத்தாலிய அரசு சீ பிளேன்களை வழங்கியதாம்!

ஜே.வி.பி.சார்பு இணையத்தளம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளில் உதவிப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் இத்தாலிய அரசாங்கம் இரண்டு சீபிளேன்களை விடுதலைப்புலிகளுக்கு வழங்கியதாகவும் அவற்றை, பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கை விமானப்படை (12 ஆம் பக்கம் பார்க்க)



சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவந்த ஜேர்மனிய வெளிநாட்டமைச்சருடன் ஜனாதிபதி சந்திரிகா.

## இந்தியத் தூதுவர் குடாநாட்டுக்கு விஜயம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் நேற்று யாழ்.குடாநாட்டுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இவர் விமானம் மூலம் பலாலியை வந்தடைந்து இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன் வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் சேதமடைந்த பகுதிகளைப்பார்வையிட்டார். தொடர்ந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிட்டார்.

பின்னர் நேற்று மாலை யாழ் நகரப்பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டு யாழ்.பொது நூல்நிலையத்திற்கு வருகைதந்து யாழ்.பொது நூலகரைச் சந்தித்து கலந்துரையாடினார். யாழ்.பொது நூல் நிலையத்துக்கு இந்தியா வழங்கிய நூல்களின் பயன்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்தார். பின்னர் யாழ் நூல் நிலையத்தை சுற்றி பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார்.

## மட்டக்களப்பு - அம்பாறையில் வெளிநாட்டுப் படையினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அமெரிக்க இராணுவத்தினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக நூற்றுக்கு மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் இந்த மாவட்டங்களில் நிலைகொண்டுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...









சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதியில் மீட்புப்பணியில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினரையும், பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

### வடமராட்சி கரையோரப் பகுதியில்

# பொதுமக்களின் சொத்துக்களை பயன்படுத்தி படையினர் காவலரண்கள் அமைக்கின்றனர்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வடமராட்சி கரையோரப் பகுதியில் சுனாமி கடல் கொந்தளிப்பின் போது உடைந்த கட்டடத் தூண்கள், மற்றும் கூரைத் தகடுகளை படையினர் காவலரண்களை அமைப்பதற்குப் பயன்படுத்தி வருவதாக அப்பகுதி மக்களால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கரையோரப் பகுதியில் படையினரால் அமைக்கப் பட்டிருந்த காவலரண்கள் சுனாமி கடல் கொந்தளிப்பின்போது அள்ளிச் செல்லப்பட்டதுடன் அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் சிலரும் காணாமற் போயிருந்தனர்.

சுனாமியால் சேதமடைந்த தமது காவலரண்களை புதிதாக அமைக்கும் நடவடிக்கையில் படையினர் தற்போது துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப்பகுதியில் முன்னர் காவலரண்கள் அமைக்கப்பட்டது போன்று சுமார் இருநூறு மீற்றருக்கு ஒரு காவலரண்களை படையினர் அமைத்து வருவதுடன், முகாம்களையும் புதிதாக நிர்மாணித்து வருகின்றனர்.

இதற்கென சுனாமி கடற்கொந்தளிப்பின்போது பொதுமக்களின் உடைந்த வீடுகளின் கற்தூண்கள், கூரைத் தகடுகள் மற்றும் தளபாடங்களை பயன்படுத்திவருகின்றனர்.

பொதுமக்களின் சொத்துக்களை பயன்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டும் என்றும், நிறுத்தத் தவறின் பொதுமக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

### கவுணாவத்தை ஆலயத்திற்கு செல்ல படையினர் அனுமதி

வலிவடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கவுணாவத்தை வைரவர் ஆலயத்திற்குச் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தைப்பொங்கல் தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை பொங்கல் பூசைகளைச் செய்வதற்கு அனுமதிக்குமாறு அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து படையினர் இந்த அனுமதியை வழங்கியுள்ளனர்.

அன்றையதினம் சேந்தாங்குளம் சோதனைச்சாவடியூடாக காலை 9 மணிமுதல் அடியார்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மேலும் இரு சடலங்கள் வடமராட்சி கிழக்கில் மீட்பு

சுனாமி கடல்கொந்தளிப்பின் போது வடமராட்சி கிழக்கில் கடல் அள்ளிச்சென்றிருந்த ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் வெற்றிலைக்கேணியில் நேற்றுமுன் தினம் கரையொதுங்கியுள்ளது. இது மீட்புப்பணியாளர்களால் மீட்கப்பட்டு புதைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உடுத்துறையில் கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்கி உயிரிழந்த சிறுவன் ஒருவரின் சடலமும் மீட்புப்படையினரால் மீட்கப்பட்டது.

இதேவேளை மேற்படி சிறுவனின் தாயாரும் அந்த கட்டட இடிபாடுகளுக்குள் உயிரிழந்த நிலையில் முன்னர் சடலமாக மீட்கப்பட்டதாக சடலத்தை அடையாளம் காட்டிய அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.


## சிறு விளம்பரம்

### ஆங்கில வகுப்புக்கள்

பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 15, 16, 17, 19ம் திகதிகளில் மாலை 4.00 மணி (பு.நே) "Mr.Institute of English", நல்லூர் பின் வீதிச்சந்தி, கிளைகள் - பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, OLR வீதி, ஆனைக்கோட்டை. T.P 077 6179127 (1029)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா,





**ஜெய் சூர்யா**

கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)

பொங்கல் வெளியீடாக தனுஷின் **தேவதையைக் கண்டேன்**

**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், சிநேகா, வடிவேலு நடித்த **வசீகரா**

பொங்கல் வெளியீடாக சரத்குமாரின் **ஐயா** (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. மட்டும்.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

பிரசாந், சிம்ரன் நடித்த **ஜோடி** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)


**ANACONDA - 2**

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு இலங்கை மண் தாவடியின் மைந்தன் ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த **ராமகிருஷ்ணா**

பொங்கல் வெளியீடு பிரசாந், சினேகா நடித்த **ஆயுதம்**

காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)



இருபதாவது அகவையைப் பூர்த்தி செய்து தொடர்ந்தும் வீறு நடையுடன்...

## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான துரித 3 மாதகாலப் பயிற்சிகள்

* கேக் ஐசிங் - சகலவிதமான ஐஸிங், 22 வகையான கேக் அமைப்புக்கள், மாச்சீனி வகைகள் (Sugar Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
* கூந்தல் அலங்காரம் - 20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
* FABRIC PAINTING - SAREE PAINTING, கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணந்தீட்டுதல், EMBOSS PAINTING, POT PAINTING மண் PAINTING
* உணவுகள் தயாரித்தல் - மேலைத்தேச, கீழைத்தேச மற்றும் சீன உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
* கைவேலை - கடதாசி அலங்காரம், கழிவுத்துணிவேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன் வேலை.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2 நாள் வகுப்புகளாக நடைபெறும்.

### 6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புகள்

* தையல் பயிற்சி - குழந்தைகள், சிறுவர்,மகளிருக்கான உடைகள் தைத்தல்.
* பூவேலை - கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்.

**சனி, ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம் :- 15.01.2005**
**கிழமைநாள் புதிய வகுப்புகள் ஆரம்பம் :- 19.01.2005**

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

இயக்குநர்.



## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.

## பதவி வெற்றிடம்

கீழ்க்காண் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கை பிரசைகளிடமிருந்து உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத்திகதி 25.01.2005 ஆகும். விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/= செலுத்தி தலைமைக்கந்தோரில் காலை 9.00மணி தொடக்கம் பி.ப.5.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு நேரடியாக அன்றேல் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பப் படிவத்துடன் சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். கூட்டுறவுச்சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தலைமைக் கந்தோரில் தொடர்புகொள்ளவும்.

| பதவியின் பெயர் | சம்பள குறியீடு | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. உள்ளக கணக்காய்வாளர் | 105.10 | 01 |
| 2. வர்த்தக முகாமையாளர் | 106.10 | 01 |
| 3. கிளை மேற்பார்வையாளர் | 207.11 | 01 |
| 4. கிளை முகாமையாளர் | 208.15 | 06 |
| 5. எழுதுனர் | 302.15 | 02 |
| 6. விற்பனையாளர் | 308.17 | 01 |
| 7. சாரதி | 312.14 | 02 |
| 8. கூலியாள் | 318.17 | 02 |

நீர்வேலி பொது முகாமையாளர்

# கொபி அனானை தடுத்ததால் அரசு நன்மதிப்பை இழந்துவிட்டது

## இந்துஸ்தான் ரைம்ஸுக்கு புலித்தேவன் பேட்டி

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் சுனாமி அனர்த்த அழிவுகளைப் பார்வையிட ஐ.நா. செயலர் கொபி அனானை இலங்கை அரசு தடுத்தமையால், அது சர்வ தேசரீதியில் நன்மதிப்பை இழந்துள்ள தாக விடுதலைப் புலிகளின் சமா தானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வைத்து நேற்று முன்தினம் இந்துஸ்தான் ரைம்ஸிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டி யில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது -

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்கு ஐ.நா செயலர் கொபி அனான் செல்வதற்கிருந்த போதிலும், அதனை இலங்கை அர சாங்கம் தடுத்து விட்டதாக, ஐ.நா அதிகாரிகள் சர்வதேச மற்றும் இலத் திரனியல் ஊடகங்களுக்குத் தெரிவித் தனர். எனவே இந்த விடயத்தில் விடு தலைப் புலிகள் எதையும் இழக்க வில்லை. மாறாக இலங்கை அர சாங்கமே இழந்துள்ளது.

இதன்மூலம் சர்வதேச சமூகத் தில் விடுதலைப் புலிகள் எவ்வித நன்மதிப்பையும் இழக்கவில்லை. எனவே ஐ.நாசெயலரை இலங்கை அரசாங்கம் தடுத்தமை தொடர்பாக அவரிடம் முறையிட, நான் அவரைச் சந்திக்கும் திட்டமெதனையும் கொண்டிருக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஏற்கனவே ஐ.நா செயலரைச் சந் தித்து, இது தொடர்பாகவும், தமிழ்ப் பிரதேசங்களுக்கு உதவிப் பொருட் கள் விநியோகிக்கப்படுவதிலுள்ள பாரபட்சம் தொடர்பாகவும் எடுத்து விளக்கியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் அனுப்பப்படும் உதவிப் பொருட் களை, விடுதலைப் புலிகள் பறித் துத் தமது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்துவதாகத் தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முல் லைத்தீவில் ஐ.நா. அதிகாரிகள் தளமிட்டுள்ளனர். இந்தக் குற்றச் சாட்டுத் தொடர்பாக எவரும் வந்து பரிசோதனை செய்து பார்க்கலாம்.

அத்துடன் இடம்பெயர்ந்து, நலன் புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் முகாம்களைப் படை யினர் பொறுப்பேற்றதால், அங்கு தங்கியிருந்த தமிழ் அகதிகள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இதற்குத் திருமலை சான்றாகும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டுப் பகுதிக்கு அரசாங்கம் உதவிப் பொருட்களை அனுப்பாவிட்டாலும் அங்கு பொருட்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை. ஏனெனில், இந்த உதவிப் பொருட்களை உலக உணவு ஸ்தாபனம், போரூட் மற் றும் சில அரச சார்பற்ற நிறுவனங் கள் உட்பட, தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் வழங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வாகனேரி கைக்குண்டுத் தாக்குதல்; சந்தேகத்தில் இளைஞர்கள் கைது!

மட்டக்களப்பு - வாகனேரியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பாக இரண்டு இளைஞர்களை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மரணவீடொன்றில் சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள் மீதே இந்தக் கைக்குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 8 வயதுச் சிறுவன் உட்பட மூவர் அந்த இடத் திலேயே உயிரிழந்தனர். பெண்கள், குழந்தைகள் உட்பட 37 பேர் காய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மதம் தொடர்பாக இரு பிரிவின ருக்கு இடையே கடந்த இரண்டு வார காலமாக நிலவிவந்த முரண் பாடுகளே இந்தக் கைக்குண்டு வீச் சுக்குக் காரணம் என வாழைச் சேனை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந் துள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கிறிஸ்தவ தேவாலய போத கர் ஒருவரின் மகனான மணியம் ஜெயப்பிரகாஸ் (வயது24), கண பதிப்பிள்ளை கமலநாதன் (வயது 20) ஆகியோர் கைதுசெய்யப் பட்டனர்.

இவர்கள் இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் முன்னிலையில ஆஜர் படுத்தப்பட்டு, அவரது உத்தரவின் பேரில் எதிர்வரும் 19 ஆம் தி..தி வரை விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

# சுனாமி நூதன சாலையை அமைப்பதற்கு அரசு திட்டம்!

சுனாமி அனர்த்தத்தை சித்தரிக்கும் நூதன சாலையொன்றை நிறுவுவதற்குக் கலாசார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சித்தரிக்கும் புகைப் படங்கள் மற்றும் ஒளிநாடாக்களைச் சேகரித்துப் புதிய நூதன சாலையொன்றை நிறுவுமாறு கலாசார அமைச்சர் விஜித ஹேரத் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் கூாலை கலாசார அமைச்சில் நடைபெற்ற கலந் துரையாடலில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது -

சுனாமி அனர்த்தத்தைச் சித்தரிக்கும் வகையில் உருவாக்கப்படவுள்ள இந்த நூதனசாலை - இலங்கை மக்களின் சிந்தனைக்கு உந்து சக்தியாக அமையும். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் குறுகிய தமது அபிலாஷைகளை மறந்து, தற்போது ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக, எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்வதற்கு அமைக்கப்படவுள்ள இந்த நூதனசாலை உதவும். எனவே இந்த நூதனசாலை அமைப்பதற்கான காணியையும் மற்றும் உதவிகளையும் நன்கொடையாகத் தரவிரும்புவோரின் விபரத்தை அதி காரிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## மீன் பிடி உபகரணங்கள் வழங்க நடவடிக்கை

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மீனவர்களுக்கு- படகுகள், இயந்திரங்கள் மற்றும் மீன் பிடி உபகரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த அனர்த்தத்தால் மீனவர்க ளுக்கு ஏற்பட்ட அழிவுகளை மதிப் பிடுவதற்கான விசேட செயற்திட்ட மொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் சந்திர சேன விஜயசிங்க தெரிவத்தார்.(தே)

# தம்பியின் கத்திக்குத்தில் அண்ணன் உயிரிழந்தார்!

எரிபொருள் கொள்கலன் மூடுவதில் அண்ணன் - தம்பிக்கு இடை யில் ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது, எதிர்பாராதவிதமாக தம்பியின் கத்திக்குத்துக்கு இலக்காகி அண்ணன் உயிரிழந்த சம்பவம் மன்னாரில் இடம்பெற்றது.

பேசாலை 3 ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந் தச் சம்பவத்தில் கிறிஸ்கோப்பஸ் அன்ரன் லோகு (வயது 34) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

கடற்தொழிலுக்கு கொண்டுசெல்வதற்காக மீன்பிடிப்படகுக்கு எடுத் துச்செல்லப்பட்ட எரிபொருள் கொள்கலனைத் தம்பி எடுத்துச் சென்றுள் ளார். இதன்போது கொள்கலனை மூடிச் செல்லாததை அடுத்து தம் பியை அண்ணன் பேசியபோது, இருவருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டது.

இதனால் ஆத்தரமடைந்த தம்பி, அண்ணனின் வயிற்றில் கத்தியால் குத்தியதில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் பேசாலை வைத் தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர், அங்கு உயிரிழந்தார்.(201)

# அபிவிருத்தி குறித்த திட்டங்களை 15 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குக

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களின் விரைவான அபிவிருத்தி தொடர்பான திட்டங் களைத் தயாரிக்கப்பட்டு, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தன் னிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா நிதியமைச்சின் அதிகாரி களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு உட்பட சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களை, விரைவா கக் கட்டியெழுப்புவது தொடர்பான திட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதனை 15 ஆம் திகதிக்கு முன் ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருவதாகவும் நிதியமைச் சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த திட்ட ஆலோசனைக ளுக்கு அமைவாக அபிவிருத்தி வழிமுறைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மெனவும், ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் அந்தந்தப் பிர தேசத்துக்கேற்ற வகையில் வேறு வேறாகத் தயாரிக்கப்பட வேண்டு மெனவும் ஜனாதிபதி அதிகாரி களுக்கு ஆலோசனை வழங்கி யுள்ளார்.

இந்த விரைவான அபிவிருத்தி ஆலோசனைகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி செயலக சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரால் தயாரிக்கப்பட்டு வரு வதாகவும் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார். (தே)

# 350 தொன் உதவிப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து கிடைத்தது

சுனாமி அனர்த்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென இது வரை வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்க ளிடமிருந்து 350 தொன் உதவிப் பொருட்கள் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இலங்கைக்கு வந்து சேர்ந்த உதவிப் பொருட்களில் - உணவு வகைகள், மருந்துப் பொருட்கள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்குச் சேவை யாற்றவெனக் கடந்த ஞாயிற்றுக்கிழமைவரை 46 நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் என 456 பேர் வந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (தே)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோர்

# எவரையும் பட்டினியால் உயிரிழக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட எவரும் பட்டினியால் உயி ரிழக்க அனுமதிக்கப்படமாட்டார் களென ஜனாதிபதி சந்திரிகா பி. பி.சி தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்து ள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையின் வரலாற்றில் ஏற்பட்ட பாரிய அனர்த்தம் இது வாகும். நாம் அரசமற்றும் சர்வதேச நிறுவனங்களூடாக உதவிப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட பிர தேசங்களுக்கு அனுப்பிவைத்துள் ளோம்.

சுனாமி அனர்த்தத்தால் பாரிய உயிர்ச் சேதம் கிழக்கு மாகாணத் திலும், அடுத்து தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளிலும் ஏற்பட்டுள் ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக் கான புனரமைப்பு பணிகள் எதிர் வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இந்த அனர்த்தம் நிகழ்ந்த வேளை இருந்த உணவு மற்றும் குடிநீர் போன்றவற்றைப் பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு அனுப் பினோம்.

இந்த அனர்த்தம் காரணமாக 90 ஆயிரம் வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அடுத்த சில வாரங்களில் எமக்கு மேலதிகமாக உணவுப் பொருட்கள் தேவைப் படும்.

இலங்கைக்கு தொழில்நுட்ப ரீதியிலான உதவிகளை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும். பாதிக்



கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டி யெழுப்ப பொறியியலாளர்கள், கட்டடக் கலைஞர்கள் போன்றோர் தேவைப்படுகின்றனர்.

வடக்கு- கிழக்கு முதல் தென் பகுதிவரை புனரமைப்பு வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்தத் தொழில் நுட்ப உதவிகள் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இயற்கை அழிவுகள் குறித்த எச்சரிக்கை அமைப்பை உருவாக்கும் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது!

(கொழும்பு)

மிகப் பெரியளவிலான கடல் அலைகள், மற்றும் பூமியதிர்வு குறித்த இயற்கை அழிவுகளின் அடிப்படை அறிவுரைகள் குறித்து ஆராய்வதற்கும், அதற்குத் தேவை யான உபகரணங்களை கொள் வனவு செய்வதற்கு சிபாரிசு செய் வதற்குமான குழுவொன்று சுற்றா டல் துறை அமைச்சால் நியமிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இந் தக் குழுவில் 4 பேராசிரியர்கள் உட் பட 6 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவின் அறிக்கையை விரைவில் எதிர்பார்ப்பதாகவும், சுனாமி பேரனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் அதுகுறித்த அறிவுறுத் தல்கள் விடுக்கப்படாமை குறித்தும் மக்கள் தமது கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

எனவே இது தொடர்பான திட்ட மொன்றை சிபார்சு செய்யவே இந் தக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக வும், அனர்த்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டதும், அது தொடர்பாக மக்களுக்கு உடனடி யாக அறிவுறுத்துவதற்கான முறை கள் குறித்து ஆராயுமாறும் அமைச் சர் இந்தக் குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## பாரிசில் மாநாடு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப் பட்ட கடன்களை இரத்துச் செய் வது தொடர்பாக, ஆராயும் ஜி - 8 நாடு களின் மாநாடு, இன்று புதன்கிழமை பாரிசில் இடம் பெற வுள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இத் தாலி, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் இந்த அமைப்பில் அங் கம் வகிக்கின்றனர். (தே)

# பாகிஸ்தானிய கப்பல்களும் இலங்கைக்கு வந்தன!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட் களை எடுத்துக் கொண்டு, இரண்டு பாகிஸ்தானிய கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தக் கப்பல்களில் 100 மெற்றிக் தொன் அரிசி மற்றும் பல்வேறு பொருட்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்துடன் 15 வைத்தியர்களும் வருகை தந்துள்ளதுடன், 15 கட்டில்களைக்கொண்ட நடமாடும் வைத்தியசாலை யொன்றும் பாகிஸ்தான் கப்பலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாவது டெஸ்ட் வெற்றியை பங்களாதேஷ் கைப்பற்றியது!




(சிட்டகொங்)

சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் - பங்களாதேஷ் அணி தனது முதல் டெஸ்ட் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

சிட்டகொங்கில் நடைபெற்று வந்த இந்த டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று முன்தினம் 3 விக்கெட் இழப்புக்கு 46 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்து சிம்பாப்வே அணி ஆட்டத்தை ஆரம்பித்தது.


மசகட்சாவும் ரெய்லரும் இணைந்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இதனால், சிம்பாப்வே அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்துகொண்டிருந்தது.

இந்த நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 112 ஆக அதிகரித்தபோது ரெய்லரின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

73 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரெய்லரை இனாமுல் ஹக் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இதனையடுத்து அணித் தலைவர் தைபு களமிறங்கினார். இவர் ஓட்டங்களைக் குவிப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தபோதும், எதிர்கொண்ட பந்துகளை அடிக்கவோ, தடுக்கவோ முடியாமல் திண்டாடினார்.

15 பந்துகளை எதிர்கொண்டு எந்தவொரு



ஓட்டத்தையும் பெறாமலேயே தைபு ஆட்டமிழக்க நேரிட்டது. இனாமுல் ஹக்கின் பந்து வீச்சில் அஸ்ரப் அகமட்டிடம் பிடிகொடுத்து



இவர் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் சிம்பாப்வே அணி தடுமாறத் தொடங்கியது. ஒரு முனையில் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்த மசகட்சா 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததை அடுத்து சிம்பாப்வே அணியின் தோல்வி விரைவுபடுத்தப்பட்டது. இதன் பின்னர் களமிறங்கிய சிகும்பரா - 10 ஓட்டங்களுடனும், என்காலா 5 ஓட்டங்களுடனும், கிறீமர் 2 ஓட்டங்களுடனும், மொபே 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். கொண்டோ ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களைப் பெற்றார்.

சிம்பாப்வே அணி 154 ஓட்டங்களுக்குள் இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால், பங்களாதேஷ் அணி 226 ஓட்டங்களால் தனது முதல் வெற்றியைப் பெற்றது.

பந்துவீச்சில் இனாமுல் ஹக் 45 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், மொர்ராசா, பாஸ்யா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

2000 ஆம் ஆண்டில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேஷ் அணி இதற்கு முன்னர் 34 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 31 போட்டிகளில் தோல்விகண்டிருந்தது.

சிம்பாப்வே அணிக்கு எதிராக இரண்டு டெஸ்ட்களிலும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக ஒரு டெஸ்ட்டிலும் சமநிலையைப் பெற்றிருந்தது. 35 ஆவது போட்டியிலேயே பங்களாதேஷ் அணி இந்த வெற்றியைப் பெற்றிருந்தது.

## ரசிகர்களின் கலவரத்தினால் உதைபந்தாட்டப் போட்டி ரத்து!

ரசிகர்களின் கலவரம் காரணமாக கிரீஸ் நாட்டில், கிளப் உதைபந்தாட்டப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

கிரீஸ் நாட்டில் உள்ளூர் அணிகள் மோதும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடந்து வருகின்றன. முன்னணி அணிகளான ஒலிம்பியாகஸ் பைராயஸ், பனியானியஸ் ஏதென்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி ஏதென்ஸ் நகரில் நேற்று நடப்பதாக இருந்தது. நேற்றுமுன்தினம் இரவு ஒலிம்பியாகஸ் அணியின் ரசிகர்கள் பெருங்கூட்டமாகத் திரண்டுவந்து, அரங்கில் கலவரம் செய்தனர்.

அவர்களுக்கும், அங்கு கூடியிருந்த பனியானியஸ் அணி ரசிகர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. பொலிஸார் துரிதமாக நடவடிக்கை எடுத்து கலவரத்தைக் கட்டுப்படுத்தினர். இந்தச் சம்பவத்தில் பத்து பொலிஸார் காயமடைந்தனர்.

திடீர் கலவரத்தை அடுத்து, போட்டி ரத்துச்செய்யப்பட்டது. மீண்டும் எப்போது நடத்தப்படும் என்ற விபரம் அறிவிக்கப்படவில்லை.

## லாராவின் அதிரடி ஆட்டத்தால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி!




லாராவின் அதிரடி ஆட்டத்தால் அவுஸ்ரேலிய 'ஏ' அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது.

அவுஸ்ரேலியாவின் ஹோபார்ட்டில் இந்தப் பயிற்சி ஆட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய 'ஏ' அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 266 ஓட்டங்களைக் குவித்தது. டேவிட் ஹஸ்ஸி 123 பந்துகளில் 128 ஓட்டங்களைக் குவித்தார். மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் பிராவோ 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆடத்தொடங்கியது. கிறிஸ் கெயில் 32 பந்துகளில் 40 ஓட்டங்களைக் குவித்தார். ஆனால் ஹிண்ட்ஸ் (9), மார்ஷல் (11), சர்வான் (18) ஓட்டங்கள் பெற்ற நிலையில் விரைவிலேயே ஆட்டமிழந்தனர்.

ஆனால், லாரா 86 பந்துகளை எதிர்கொண்டு 116 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் விளாசினார். அவரது ஓட்டக்குவிப்பில் 4 சிக்ஸர்களும் 12 பவுண்டரிகளும் அடங்கும். பிரெட் லீ பந்தில் மிட்-ஒன் திசையில் தூக்கியடித்த சிக்ஸர், மைதானத்தைத் தாண்டி வீதியில் விழுந்தது குறிப்பிடத்தக்கது.

48.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைக் குவித்து மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது.

# விளையாட்டு

## இலங்கை அணி நியூஸிலாந்துக்கு எதிர்வரும் ஏப்ரலில் செல்கின்றது!

(வெலிங்டன்)

சுனாமி காரணமாக பாதியிலேயே ரத்தான நியூஸிலாந்து பயணத்தை இலங்கை கிரிக்கெட் அணி ஏப்ரல் மாதம் தொடர்கிறது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணி கடந்த மாதம் நியூஸிலாந்து சென்றது. அந்த நேரத்தில், சுனாமி காரணமாக இலங்கையில் பேரழிவு ஏற்பட்டது. உடனடியாக தொடரை ரத்துச்செய்துவிட்டு இலங்கை வீரர்கள் நாடு திரும்பினர். இதனால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட, உலக லெவன் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடத்த நியூஸிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் முடிவு செய்திருக்கிறது.

இதுகுறித்து நியூஸிலாந்து கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி மார்ட்டின் ஸ்னீடன் அளித்தபேட்டியில் -

'பாதியில் ரத்தான பயணத்தைத் தொடர இலங்கை அணி ஆர்வமாக இருக்கிறது. இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடராக விளையாடி முடிப்பதுபற்றி பேசி வருகிறோம். ஏப்ரல் மாதம் இலங்கை அணி இங்கு பயணம் வரும். இதற்கிடையே, உலக லெவன் அணிக்கு எதிராக இம்மாத இறுதியில் ஒருநாள்தொடர் நடத்தவும் முடிவு செய்திருக்கிறோம். ஷேன் வோன், முத்தையா முரளிதரன், லான்ஸ் குளூஸ்னர், அன்டி பிளவர், ஹீத் ஸ்ரீக் உட்பட பலரும் இதில் பங்கேற்பார்கள்' என்றார்.

## முக்கோணப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி!

(சிட்னி)

அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் மேற்கிந்தியத்தீவு ஆகிய நாடுகளிடையேயான கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் அவுஸ்ரேலியாவில் தொடங்கவுள்ளது.


இந்தப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த கிளார்க் அணியில் இடம்பெற்றுள்ளார். ஆயினும் உடற் தகுதியைப் பொறுத்தே அவர் விளையாடுவார்.

அவஸ்ரேலிய அணி விபரம் -

பொண்டிங் (கப்டன்), கில்கிறிஸ்ட், ஹைடன், கடிச், லீமன், மார்ட்டின், சைமன்ஸ், பிரட் ஹொக், கஸ்பரோவிச், ஜிலெஸ்பி, மக்ரா, வட்சன்.



சென்னை ஓபன் ரெனிஸ் போட்டியில் - இரட்டையர் பிரிவில் ரெயினர் ஸ்கியூட்லர் (இடது - ஜேர்மனி), யென் ஹுசுன்லு (தைபே) ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.




மட்ரிட் டில் நடந்த ஸ்பானிஷ் லீக் கால்பந்துப் போட்டியில் ரியல் மட்ரிட் அணி 3:0 என்ற கோல் கணக்கில் அட்லெடிகோ டி மட்ரிட் அணியை வீழ்த்தியது. எதிரணி வீரர்களை ஏமாற்றி மட்ரிட் அணி வீரர் ரொனால்டோ கோல் அடிக்கிறார்.

## மெல்பேர்ன் கிரிக்கெட் மூலம் 125 கோடிரூபா நிதி கிடைத்தது!

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான நிதி திரட்டுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் உலக லெவன் - ஆசிய லெவன் அணிகள் மோதிய ஒரு நாள் போட்டி மெல்பேர்னில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியை 70 ஆயிரத்து 101 பேர் ரசித்தனர். மனித நேயத்துக்காக நடைபெற்ற இந்த நிவாரணப் போட்டி மூலம் சுமார் 125 கோடி ரூபா நிதி திரட்டப்பட்டது.

போட்டியை தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் உரிமை மற்றும் விளம்பரங்கள் மூலம் இந்த நிதி திரட்டப்பட்டது. சுமார் 75 கோடி நிதி கிடைக்கும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதைவிட கூடுதலாக 50 கோடிக்குமேல் கிடைத்துள்ளது.

இந்தப் போட்டியில் அடிக்கும் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 1 லட்சம் ரூபாவும், ஒவ்வொரு சிக்சருக்கும் 50 லட்சம் ரூபாவும் வழங்குவதாக நிறுவனங்கள் அறிவித்தன.

உலக லெவன் அணி 344 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் சுமார் 5 கோடி 50 லட்சம் ரூபா கிடைத்தது. ஆசிய லெவன் 232 ஓட்டம் எடுத்தது. இதில் 2 கோடி 76 லட்சம் ரூபா கிடைத்தது. ஓட்டங்கள் மூலம் மொத்தம் 8 கோடி 26 லட்சம் ரூபா கிடைத்தது.


உலக லெவன் கப்டனும் அவுஸ்ரேலிய வீரருமான ரிக்கி பொண்டிங் இந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடினார். இதன் மூலம் அவர் 2 கோடி 43 லட்சம் ரூபா திரட்டிக்கொடுத்தார்.

அவர் 115 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் 1 கோடி 15 லட்சம் ரூபா கிடைத்தது. 3 சிக்ஸர்கள் அடித்தார். இதன் மூலம் 1 கோடி 50 லட்சம் ரூபா கிடைத்தது.


பொண்டிங்கிற்கு அடுத்த படியாக நியூசிலாந்து வீரர் கிறிஸ்கெய்ன்ஸ் 1 கோடி 70 லட்சம் ரூபா நிதி திரட்டினார். அவர் 69 ஓட்டங்கள் எடுத்தார். 2 சிக்சர்கள் அடித்தார்.

ஆசிய லெவனைப் பொறுத்தவரை ஷேவாக் அதிக நிதி திரட்டிக் கொடுத்தார். அவர் 45 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் 45 லட்சமும் ஒரு சிக்சர் மூலம் 50 லட்சமும் கிடைத்தது.

இந்த ஆட்டத்தில் மொத்தம் 7 சிக்சர்கள் அடிக்கப்பட்டன. உலக லெவனில் பொண்டிங் 3 சிக்சரும், கிறிஸ் கெயின்ஸ் 2 சிக்சரும், கில்கிறிஸ்ட் ஒரு சிக்சரும் அடித்தனர். ஆசிய லெவனில் ஷேவாக் மட்டுமே




ஒரேயொரு சிக்சர் அடித்தார். 7 சிக்சர் மூலம் மொத்தம் 3 கோடி 50 லட்சம் ரூபா கிடைத்தது.



**10.** படத்தில் காட்டப்பட்டவாறு தொடுக்கப்பட்ட ஒரு ஒளிக்கலத்தின் கதோட்டில் ஒரு நிற ஒளிபடும்போது, சுற்றில் ஓட்டம் ஏற்படவில்லை. இதற்கு மிகவும் பொருத்தமான காரணம் -

1) ஒளியின் செறிவு குறைவாக இருத்தல்

2) ஒளியின் மீடிறன் நுழைவாய் மீடிறனிலும் அதிகமாக இருத்தல்

3) ஒளியின் அலைநீளம் நுழைவாய் அலைநீளத்திலும் அதிகமாக இருத்தல்

4) பற்றரியின் முனைவுகள் சரியாகத் தொடுக்கப்படாமை

5) பற்றரியின் வோல்ற் அளவு தடுக்கும் அழுத்தத்தைவிட கூடுதலாக இருத்தல்.

**11.** வளியில் ஒளியின் வேகம் C பிளாங்கின் மாறிலி h எனில் V வேகத்துடன் செல்லும் m இன் தணிவுள்ள துணிக்கையின் D புறொக்லி அலை நீளம்

1) 2h/mv 2) 2hc/mv 3) h/mv 4) 2h/mc 5) h/mc

**12.** இலத்திரன்களைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.

(A) அவை மின்புலமொன்றினால் ஆர்முடுக்கமடைய கூடும்.

(B) அவற்றைக் கோணலடையச் செய்யலாம்.

(C) P உந்தமுள்ள இலத்திரன்களின் டி புறொக்கி அலை நீளம் இவற்றுள்.

(i) A மட்டும் சரி (ii) B மட்டும் சரி
(iii) C மட்டும் சரி (iv) A யும் B யும் சரி
(v) B யும் Cயும் சரி

**13.** ஒரு துணிக்கையின் டி புறொக்லி அலை நீளம் $10^{-10}$ m எனின் அத் துணிக்கையின் உந்தம்

(i) $19.8x10^{-16}$ Ns (ii) $6.6X10^{-24}$ Ns
(iii) $2.2X10^{-32}$ Ns (iv) $6.6X10^{-34}$ Ns
(v) $6.6x10^{-44}$ Ns

**14.** (A) கட்புக ஒளி
(B) x- கதிர்
(C) இலத்திரன் கற்றை

மேலுள்ளவற்றுள் அலை இயல்புகளையும் துணிக்கை இயல்புகளையும் காட்டக்கூடியது.

(i) A மட்டும் (ii) C மட்டும்
(iii) A யும் B யும் மட்டும் (iv) Aயும் Cயும் மட்டும்
(v) A,B,C எல்லாம்.

**15.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக

(A) மெல்லிய காபன் படலத்தின் இலத்திரன் கற்றை கோணலடையக்கூடும்.

(B) 3 Cm அலை நீளம் உள்ள மைக்கிறோ அலைகள் 2cm துவாரத்தில் கோணலடையும்

(C) ஒளி அலைகளை கோணலடையச் செய்ய 1mm இலும் சிறிய துவாரத்தை பயன்படுத்த வேண்டும்.

மேலுள்ள கூற்றுக்களில்

(i) A மட்டும் சரி (ii) A யும் Bயும் மட்டும் சரி
(iii) A யும் C யும் மட்டும் சரி (iv) Bயும் Cயும் மட்டும் சா
(v) A,B,C எல்லாம் சரி

**16.** X கதிர்கள்

அ) உயர் அலை நீளம் உள்ளவை

ஆ) மின் காந்த அலைகள் ஆகும்

இ) வளியை அயனாக்கம் செய்யும்

மேலுள்ள கூற்றுக்களில்

(i) அ மட்டும் உண்மையானது
(ii) ஆ மட்டும் உண்மையானது
(iii) இ மட்டும் உண்மையானது
(iv) அ,ஆ இரண்டும் உண்மையானது
(v) ஆ,இ இரண்டும் உண்மையானவை

**17.** X - கதிர்களின் அலை நீளம் ஆக இருக்கக் கூடிய பெறுமானம்

(i) $10^{-10}$m (ii) $10^{-7}$ m (iii) $10^{-6}$m
(iv) $10^{-4}$m (v) $10^{-2}$m

**28.** x கதிர்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரி அல்லாதது யாது?

(i) x கதிர்கள் நேர்கோட்டில் செல்லும்

(ii) அவை உயர் சக்தியுள்ள போட்டன்களால் ஆனவை

(iii) அவை திரவியப்பளிங்குகளில் கோணலடையும்

(iv) அவை காந்தப் புலத்தினால் திசை திருப்பமடையும்

(v) வளியூடாகச் செல்லும் போது, வளியை அயனாக்கம் செய்யும்

**19.** (அ) உயர் சக்தியுடைய இலத்திரன்கள் தங்குதன் தட்டில் மோதும் போது x கதிர்கள் பிறப்பிக்கப்படும்

(அ) x கதிர்கள் தலையீடு அடையச் செய்யலாம்

(இ) x கதிர்கள் போட்டன் சக்தி, ஒளி போட்டன் சக்தியை விட பல்மடங்கு உயர்வானது. மேலுள்ள கூற்றுக்களில்

(i) அ மட்டும் சரி (ii) அ,ஆ மட்டும் சரி
(iii) அ,இ மட்டும் சரி (iv) ஆ,இ மட்டும் சரி
(v) அ,ஆ,இ எல்லாம் சரி

**20.** பின்வரும் கூற்றுக்களை கருதுக.

(அ) X கதிர்கள் சில சந்தர்ப்பங்களில் துணிக்கை இயல்புகளை வெளிப்படுத்தும்

(ஆ) இலத்திரன் சில சந்தர்ப்பங்களில் அலை இயல்புகளை வெளிப்படுத்தும்

(இ) ஒளிக்கற்றை தங்குதன் தட்டில் படும் போது X கதிர்கள் உற்பத்தியாகும்

இவற்றுள்

(i) அ மட்டும் சரி (ii) ஆ மட்டும் சரி
(iii) அ,ஆ இரண்டும் சரி (iv) அ,இ இரண்டும் சா
(v) ஆ,இ இரண்டும் சரி

M.கருணாநிதி B.Sc (Spe)

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

**1. பின்வரும் விவரணத்தை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

அயோத்தியை தலைநகராகக்கொண்ட கோசலை நாட்டை அரிச்சந்திரன் ஆண்டான். இவனது மனைவி பெயர் சந்திரமதி. மகன் பெயர் லோகிதாசன். அரிச்சந்திரன் வாய்மை தவறாதவன். ஒரு முறை இவன் சத்தியம் தவறாதவனா? என்பதை சோதிக்க விசுவாமித்திரர் விரும்பினார். அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைக்க பல சூழ்ச்சிகள் செய்தார். இதனால் அரிச்சந்திரன் நாடு நகரங்களை இழந்தான். மனைவி, மகனை அடிமைகளாக காலகண்டன் என்பவனிடம் விற்றான். சுடலை காத்தான். சுற்றில் இந்தச் சோதனைகளில் எல்லாம் வெற்றிபெற்றான். இவ்வாறு வாய்மை காத்ததால் விசுவாமித்திரரின் ஆசியைப்பெற்று மீண்டும் அயோத்தியை ஆண்டான்.

1. அயோத்தியை தலைநகராகக் கொண்ட நாடு எது?

2. அரிச்சந்திரனின் மனைவி பெயரென்ன?

3. அரிச்சந்திரன் சத்தியம் தவறாதவன் என்பதைச் சோதிக்க விரும்பியவர் யார்?

4. அரிச்சந்திரன் மனைவி, மகனை யாரிடம் விற்றான்?

5. வாய்மை என்பதற்கு ஒத்தசொல் தருக?

6. மனைவி என்பதற்கு எதிர்ப்பாற் சொல் தருக?

7. ஈறு என்பதன் எதிர்ச்சொல் யாது?

8. ஆண்டான் என்பதன் நிகழ்காலச்சொல் யாது?

9. அரிச்சந்திரன் வாய்மை காத்ததால் யாருடைய ஆசியைப் பெற்று மீண்டும் அரசாண்டான்?

10. சூழ்ச்சிகள் என்பதன் ஒருமைச்சொல் யாது?

**2. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத் துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1. மரக்குற்றியைப்/ வந்தது/ நரி/ கொண்டு/ பந்தலுக்கு/ அருகில்

2. வாழ்வே/ செல்வம்/ நோயற்ற/ குறைவற்ற

**3. பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1. த. ளி. த். கி. ட். டு ....................

2. வ. ந். து. லை. ப். ப ....................

**4. பின்வரும் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை தமிழ் மொழியில் எழுதுக.**

1. Chair ....................
2. Peon ....................
3. Mosque ....................
3. Whistle ....................

**5. சரியான விடையின் கீழ் கோடு இடுக.**

1. விதைகளைப் பரப்பும் காரணியல்லாதது.
1. காற்று 2. நீர் 3. ஒளி 4. அதிர்ந்து வெடிக்கும் பொறிமுறை

2. செடிவகைகளின் ஒன்று.
1. மரவள்ளி 2. மிளகாய் 3. பாகல் 4. பூசணி

3. தேசியப் பூ எனக்கூறப்படுவது.
1. நீரோற்பலம் 2. தாமரை 3. மல்லிகை 4. செவ்வரத்தை

4. சிறிய பிரிவற்ற இலைகளைக் கொண்டது.
1. பாகல் 2. வில்வம் 3. பனை 4. வேம்பு

5. எமது தேசிய உணவு.
1. சம்பாச்சோறு 2. நெல்லரிச்சோறு
3. சவ்வரிச்சோறு 4. வெள்ளைச்சோறு

6. எமது நாட்டை அன்ட ஐரோப்பிய சாதியினர்.
1. பிரான்சியர் 2. கனேடியர்
3. போர்த்துக்கேயர் 4. யப்பானியர்


7. இலங்கையின் புனித மரம்.
1. வேம்பு 2. மா 3. வெள்ளரசுமரம் 4. நாகமரம்

8. தூக்கு குண்டினைப் பயன்படுத்துபவர்..
1. மேசன்மார் 2. கொல்லர் 3. தச்சர் 4. கமக்காரர்

9. அஞ்சலோட்டக் குழுவில் அங்கம் வகிப்பவர் எண்ணிக்கை.
1. 8 2. 4 3. 2 4. 1

10. துளை இடுவதற்குப் பயன்படும் உபகரணம்.
1. கைவில்லை 2. அரம் 3. துறப்பணம் 4. சம்மட்டி

**6. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் உருக்களின் பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.**



1 2 3 4

**7. பின்வரும் உபகரணங்கள் எத்தொழில்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.**

1. மண்வெட்டி ....................
2. ஸ்ரலஸ்கோப் ....................
3. புகையிலை ....................
4. மட்டப்பலகை ....................

**8. பின்வரும் பாடலிலுள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.**

பழம் நிறைந்த ..............................

பாத்துச் செல்லும் ........................................ போல்

........................................நிறைந்த நாட்டிலே

வந்து சேரும் ........................................ போல்

(கிளியைப். மக்கள். சோலையைப். வளம். காகத்தைப்)


**10. பின்வருவன சரியாயின் 'சரி'எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் எழுதுக.**


1. நீலச் சாயத்துடன் சிவப்புச் சாயத்தை கலப்பதால் ஊதா நிறத்தைப் பெற முடியும் (............)
2. மரவள்ளி கிழங்கு வகைகளில் ஒன்றாகும். (............)
3. ஒன்பது ஓர் இரட்டை எண்ணாகும். (............)
4. மள மள என்பது அடுக்குமொழியாகும். (............)
5. பழங்களில் இருந்து பழச்சாறினைப் பிழிந்து எடுக்க முடியாது. (............)
6. இரண்டாயிரத்து முன்னூற்று ஏழு என்ற எண்ணில் மூன்றின் எண்பெறுமானம் முந்நூறு (............)
7. உணவுக்குப் பயன்படும் கீரைவகைகளுள் பொன்னாங்காணியும் ஒன்று. (............)
8. போதிசெய்த உணவுகளின் கூறுகள் அவற்றின் மேலுறையில் காணப்படும். (............)
9. வளியில் நீராவி உண்டு. (............)
10. வாயிலிருந்து வளியை ஊதுவதன்மூலம் வாசிக்கப்படக்கூடிய இசைக் கருவி புல்லாங்குழல் ஆகும். (............)


**10. தரப்பட்டுள்ள உருக்களுக்குரிய பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1


..............................

2

..............................

3

..............................

4

..............................

**11. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக?.**




1. இவ்வுருவின் சுற்றளவு யாது?

2. ஒரு நோயாளருக்கு 3 தடவைக்கு 2 மாத்திரைகள் வீதம் 36 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம் மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானவை?

........................................


3. 5l பாலில் இருந்து 2l 220ml பயன்படுத்தப்பட்டது. மீதியான பாலின் அளவு யாது? ..............................

4. 1Kg பருப்பில் விலை ரூபா 75.00 எனின் 1.5 Kg பருப்பின் விலை யாது?

........................................

5. பெருக்கல் * குறியீட்டினாலும் வகுத்தல் - குறியீட்டினாலும் காட்டப்படுமெனின் 3*4-2 இன் பெறுமானம் யாது?


........................................



6. இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?

........................................

7. காட்டப்பட்டுள்ள தளவாடிகள் யாவற்றையும் பயன்படுத்தி அமைக்கக் கூடிய முப்பரிமாணப் பொருளின் பெயரை எழுதுக



..............................

8. 1/2, 1, 11/2, 2, ☐ இவ் வெண் கோலத்தில் வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

9. எல்லாப்பிள்ளைகளுக்கும் 3 பலூன்கள் வீதம் கொடுக்க ஆசிரியை சசிரேகா 10 டசின் பலூன்கள் வாங்கி வந்தார். வகுப்பிலுள்ள பிள்ளைகள் எத்தனை? ..............................

10. ஒரு பலூனின் விலை 6.00 எனின் ஆசிரியை சசிரேகா தான் வாங்கிய பலூன்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்?

........................................

12. "நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றால் ........................" என்ற தலைப்பில் நான்கு சொற்களுக்கு குறையாமல் ஆறு வசனங்கள் (பொருத்தமான எழுவாய். பயனிலையுடன்) எழுதுக.

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# க.பொ.த உயர்தரம் மாதிரி பரீட்சை


## பௌதிகவியல்

பிளாங்கின் மாறிலி 6.6 x $10^{-24}$ Js

ஸ்ரெபானின் ஒருமை 5.7x$10^{-8}$ $Wm^{-2}$ $K^{-4}$

வெற்றிடத்தில் ஒளியின் வேகம் 3.0x108 ms-1

λmT=c; c=2.9x10-3 mK




**1.** T வெப்பநிலையிலுள்ள கரும் பொருள் ஒன்றின் கதிர்ப்பின் செறிவு அலைநீளத்துடன் மாறும் விதத்தைப் படம் காட்டுகிறது. உயர்வு செறிவைக் காலும் அலைநீளம் - m பின்வரும் கூற்றுக்களில் உண்மையற்றது எது?

1) வரைபு உள்ளடக்கும் பரப்பு, கதிர்ப்பின் மொத்த செறிவுக்குச் சமன்
2) வரைபு உள்ளடக்கும் பரப்பு, T இல் மட்டும் தங்கியிருக்கும்
3) வெப்பநிலை அதிகரித்தால் λm, இன் பெறுமானம் கூடும்.
4) வெப்பநிலை அதிகரித்தால், வளையி உள்ளடக்கும் பரப்பு கூடும்.
5) λm, T இல் மட்டுமே தங்கியிருக்கும்.

**2.** முதலாம் வினாவிற்கான படத்தில் λm=3.0 x$10^{-6}$ m எனின், T இன் பெறுமானம் ஏறத்தாழ

1) 970K 2) 1240K 3) 500K
4) 9700K 5) 12400K

**3.** 1000 K இல் உள்ள ஒரு கரும் பொருள் கதிர்ப்பின் செறிவு

1) 5.7x$10^{12}$ $Wm^{-2}$ 2) 5.7x$10^{4}$ $Wm^{-2}$
3) 2.28x$10^{4}$ $Wm^{-2}$ 4) 5.7x$10^{-1}$ $Wm^{-2}$
5) 2.88x10-4 $Wm^{-2}$

**4.** பிளாங்கின் மாறிலியின் அலகு

1) $kgm^2s^{-3}$ 2) $kgm^2s^{-2}$ 3) $kgm^2s^{-1}$
4) $kgms^{-2}$ 5) $kgms^{-1}$

**5.** ஓர் மின் அடுப்பின் மூலகம் சிவப்பாகவும், ஓர் மின் விளக்கின் இழை வெள்ளையாகவும் தோற்றுகிறது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

(A) அடுப்பின் மூலகம் மின் விளக்கின் இழையைவிட குறைவான வெப்ப நிலையில் உள்ளது.

(B) வெப்பநிலை கூட குறுகிய அலைகளின் செறிவு அதிகரிக்கின்றது.

(C) வெள்ளை நிற ஒளி, சிவப்பு நிற ஒளியைவிட குறைந்த அலைநீளங்களை உள்ளடக்கியது.

இவற்றுள் மேல் அவதானிக்கப்பட்ட நிற வித்தியாசத்தை விளக்கக் கூடியவை.

1) A மட்டும் 2) Aயும் Bயும் மட்டும்
3) A யும் C யும் மட்டும் 4) B யும் Cயும் மட்டும்
5) A,B,C எல்லாம்

**6.** உறுதியான வெப்பநிலையில் உள்ள கரும் பொருள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் உண்மையற்றது எது?

1) அதன் கதிர்ப்பின் செறிவு வெப்பநிலையில் மட்டும் தங்கியிருக்கும்
2) அது காலும் வலுவும், உறிஞ்சும் வலுவும் சமமாக இருக்கும்
3) அதன் செறிவு கெல்வின் வெப்பநிலையில் நாலாம் வலுவுக்கு நேர்விகித சமனாகும்
4) கதிர்ப்பு திரவியத்தில் உயர் சக்தியை காலும் அலைநீளம் வெப்பநிலைக்கு நேர்மாறு விகித சமனாகும்
5) குறித்த ஒரு அலைநீளத்தில் காணப்படும் செறிவு, அலைநீளத்தின் நாலாம் வலுவிற்கு நேர்மாறு விகிதசமனாகும்.

**7.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

(A) அணு அலையங்கள் தொடர்ச்சியாக சக்தியைக் காலும்

(B) f மீடிறன் உடைய ஒரு அணு அலையம் hf இன் முழுக் கொள்கை ஒழுக்குமுள்ள சக்தியை மட்டுமே காலும்

(C) f மீடிறன் உடைய ஒரு அணு அலையம் hf இன் முழு எண் பெருக்கமுள்ள சக்தியை மட்டும் உறிஞ்சும்

மேலுள்ள கூற்றுக்களில் பிளாங்கின் கொள்கைக்கு ஆதாரமானவை

1) A மட்டும் 2) Aயும் Bயும் மட்டும்
3) A யும் C யும் மட்டும் 4) B யும் Cயும் மட்டும்
5) A,B,C எல்லாம்

**8.** கரும் பொருட் கதிர்ப்பின் அலை நீளத்துடனான பரம்பலைப் பூரணமாக விளக்கும் சமன்பாட்டினைக் கண்டுபிடித்தவர்

1) பிளாங்கு 2) ஸ்ரெபான் 3) ரேலி
4) வீன் 5) ஜங்ஸ்ரின்

**9.** ஊதா ஒளி ஒளிக்கலமொன்றின் கதோட்டில் விழும்போது ஒளி - இலத்திரன்கள் விடுவிக்கப்படுகின்றன. ஆனால், செந்நிற ஒளி அதில் படும்போது இலத்திரன்கள் விடுவிக்கப்படவில்லை. இதற்குக் காரணம்.

1) ஊதா ஒளி போட்டன் சக்தி, செந்நிற ஒளி போட்டன் சக்தியைவிட உயர்வானது
2) ஊதா ஒளியில் கூடுதலான போட்டன்கள் உள்ளன.
3) ஊதா ஒளியின் செறிவு செந்நிற ஒளியின் செறிவிலும் கூடியது.
4) கதோட்டுத் திரவியத்தின் நுழைவாய் அலைநீளம், செந்நிற ஒளியின் அலைநீளத்தைவிடக் கூடுதலானது.
5) திரவியத்தின் வேலைச்சார்பு, ஊதா ஒளியின் போட்டன் சக்தியைவிட உயர்வானது.

## சுனாமி அனர்த்தத்தால்

# காணாமல் போனோர் தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு அவசியம்!

## பதிவாளர் நாயகம் அறிவிப்பு

சுனாமி அனர்த்தத்தால் காணாமற் போனோர் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும் எனவும், அவ்வாறு முறைப்பாடு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள இலகுவாக இருக்கும் என, பதிவாளர் நாயகத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து பதிவாளர் நாயகத்தால் கடந்த 7 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பலர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே இவ்வாறு காணாமல் போனவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தல் வேண்டும் என்று பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அத்துடன், தமது பிரதேச கிராம அலுவலர்களிடம் முறைப்பாடு செய்தல் வேண்டும்.

மேலும், கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட திடீர் மரணங்களைப் பதிவு செய்வது தொடர்பாக சகல பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மரணவிசாரணை நடைபெற்ற இறப்புக்கள் மற்றும் மரண விசாரணை நடைபெறாது சடலம் அடையாளம் காணப்பட்டு, இறுதிக்கிரியை நடைபெற்ற இறப்புக்கள் ஆகியவற்றைப் பதிவு செய்தல் தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றறிக்கையின் பிரதிகள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர், நீதி அமைச்சின் செயலர், மாவட்டச் செயலர்கள், வலயப் பொறுப்பு உதவிப் பதிவாளர் நாயகம், பிரதேச செயலர்கள் மற்றும் காணி மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி கரையோரங்களில் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்!

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கரையோரப் பிரதேசங்களின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கடலலையால் தகர்க்கப்பட்ட வீடுகள், சுவர்கள், மரங்கள் என்பனவற்றை அகற்றுதல் மற்றும் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவால் வெடிபொருட்களும், இராணுவப் பொருட்களும் அகற்றப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து பாடசாலைகள், ஆலயங்களில் மக்கள் தங்கியிருக்க முடியாது. எனவே, வீடுகளை இழந்த மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை கடற்கரையிலிருந்து பாதுகாப்பாக சுமார் 100 மீற்றருக்க அப்பாலுள்ள பிரதேசங்களில் அமைப்பதற்காக ஆராயப்பட்டு வருகிறது.

வதிரியில் அமைந்துள்ள விசேட கருமபீடத்தில் இந்த இடைத்தங்கல் முகாம்களை அமைத்து, மக்கள் குடியேற வசதிகள் செய்யப்படுவது தொடர்பாக அரசியற்துறையும் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் ஆராய்ந்து வருகின்றன. (14)


# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இலவச தையல் பயிற்சிநெறி!

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் இலவச தையல் மற்றும் மனையியல் பயிற்சிநெறி - எதிர்வரும் 15 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளன.

ஒன்பது மாதங்கள் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறிக்கு 35 இளம் பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக தலா 50 ரூபா வழங்கப்படும் என்றும், பயிற்சி முடிவில் நடத்தப்படும் செய்முறைப் பரீட்சையில் சித்தி பெறுபவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சுனித்திரா தெரிவித்தார். (44)

## மலேசியா வாழ் மக்களால் உதவிப் பொருட்கள் கையளிப்பு




26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கும், குழந்தைகளுக்கும் உதவி செய்யும் வகையில் மலேசியா வாழ் மக்கள் மனமுவந்து அளித்த குழந்தைகளுக்குத் தேவையான பால்மா, பிஸ்கற், மற்றும் ஆடை வகைகள், பெரியோர்களுக்கான உடுபுடவைகள், மற்றும் தேவையான பொருட்களை நேற்று மலேசியா "சண்" பத்திரிகை ஆசிரியர் நடேஸ்வரனிடம் இருந்து யாழ்ப்பாண மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் சு. ஜெயராஜ் வைபவ ரீதியாக பெற்றுக்கொண்டார்.

## பொதுசன உதவிப்பணம் பெறுபவர்களின் மீளாய்வு

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குள் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் -தங்கள் கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பு மீளாய்வு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த மாதம் மீளாய்வு செய்யாதவர்களின் பெயர்கள் பெப்ரவரி மாத பட்டியலில் இடம்பெறமாட்டாது என்பதையும், இனிவரும் கொடுப்பனவுகளும் நிறுத்தப்படும் எனவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரதேச செயலர் செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

## வல்வெட்டித்துறை மாணவர்களுக்கு உதவி

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு, புலம் பெயர்ந்து வாழும் குடும்பங்களும் உதவி செய்துள்ளன.

கனடா, லண்டன் ஆகிய நாடுகளில் வசிக்கும் உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த கந்தசாமி இராசபூபதி - இரட்ணசிங்கம் குகேந்திரம் ஆகிய இரு குடும்பங்களும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு ஒரு லட்சத்து 5 ஆயிரம் பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

## பெண் பட்டதாரிகள்

# நெடுந்தீவு பாடசாலைகளில் கடமையேற்பதற்கு தயக்கம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கோட்ட பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற பெண் பட்டதாரி பயிற்றுனர் ஆசிரியர்கள் பலர் அங்கு செல்லத் தயங்குகின்றனர்.

அண்மையில் அரசால் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில், நெடுந்தீவுக் கோட்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் ஆவார்.

இவர்கள் தமது பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் போன்றவற்றால் அந்தப் பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றுவதற்குத் தயங்குகின்றனர்.

இவர்களின் நியமனம் தொடர்பாக மீள்பரிசிலனை செய்ய வேண்டும் என தமிழ் ஆசிரியர் சங்கம் கல்விப்பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### ஆன்மீக சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களம்- யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் சிவமகாலிங கம் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்த நிகழ்வில் என். தவராசா தைத்திருநாள் எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு அடைக்கல அன்னை பங்குமக்களும் உதவ!

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு, யாழ். அடைக்கல அன்னை ஆலையத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளும் நிவாரணப் பணிகளைச் செய்தனர்.

அடைக்கல அன்னை ஆலயத்தை மையப்படுத்தி சேகரிக்கப்பட்ட உல்உணவு, பால்மா, மருந்து வகைகள் என்பன வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. (206)

### சந்நிதியான் ஆச்சிரமத்தில் கலை நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகக் கலை நிகழ்ச்சித் தொடரில் நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணியளவில் சி.தில்லைமணியின் பண்ணிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. (14)

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தேசிய அபிவிருத்தி அதிகார சபையின் அதிஷ்ட இலாபச் சீட்டு 13 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடனே இந்த நிதி சேகரிக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

இதுவரை காலமும் 12 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த சுரண்டும் சீட்டுக்கள் - ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (206)

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி அன்பளிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக, யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்ட 46 ஆயிரத்து 650 ரூபா அண்மையில் யாழ். செயலகத்தில் சுனாமி கடல் கொந்தளிப்பு நிவாரணப் பணிக்குப் பொறுப்பான அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

### பொங்கல் விழா

யோகாசன பண்ணிசை வகுப்பு மாணவர்களின் பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவை ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவ மகாலிங்கம் தலைமையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : தி. திலோசன்
முகவரி : பண்டத்தரிப்பு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# கல்வி மேம்பாட்டுக்கான செயற்திட்டம் ஆரம்பம்

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் - சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கான செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கல், குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கும், விதவைகளுக்கும் உடுபுடவைகள் வழங்கல் போன்ற திட்டங்களை விரைவில் ஆரம்பித்து செயற்படுத்துவது என்று சங்கப்பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.


சங்கத்தலைவர் அ.பெனடிற் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் சார்பில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவருக்குப் பணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (14)

# மாவட்ட நிர்வாகத்தைக் கொண்டு நடத்த ஆக்கபூர்வமாக வழிகாட்டினர்!

## யாழ்.அரச அதிபர் ஊடகவியலாளருக்கு பாராட்டு



ஊடகவியலாளர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் என்பது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும். அவர்களால் ஒரு மனிதனை உயர்த்தவும் முடியும், தாழ்த்தவும் முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ தெரிவித்தார்.

வவுனியாவில் பத்து ஆண்டு காலமாக சேவையாற்றி யாழ் மாவட்டத்துக்கு மாற்றலாகிச் சென்ற அரச அதிபரைக் கௌரவிக்கும் முகமாக வன்னி ஊடகவியலாளர் சங்கம் நோயல் காடியன் விருந்தினர் விடுதியில் இரவு போசனத்தினை ஏற்பாடு செய்திருந்தது. இதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் கடந்த காலத்தில் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டுள்ளனர். என்பதையிட்டு பெருமைப்படுகின்றேன்.

மிகவும் கஷ்டமான கால கட்டத்தில் மாவட்டத்தின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்த ஆக்கபூர்வமான வழிகாட்டலாக ஊடகவியலாளர்கள் திகழ்ந்துள்ளார்கள். அது மட்டுமன்றி இந்த மாவட்டத்தின் நீதி நியாயம் இருக்க வேண்டும். சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை நிலவவேண்டும். மாவட்டம் வளர்ச்சி பெறவேண்டும் என்ற சிந்தனையுடன் வன்னி மாவட்ட ஊடகவியலாளர்கள் பணியாற்றியமை பசுமரத்து ஆணிபோல் நிலைத்துள்ளது.

கடந்த பத்து வருட காலத்தில் ஊடகவியலாளர்களுடைய பங்கு பல வழிகளிலும் உதவியுள்ளதுடன், இந்த மாவட்டத்துக்கு ஒரு முக்கிய இடத்தையும் பெற்றுக் கொடுத்தமையை எவராலும் மறக்க முடியாது. இந்த பெருமை வன்னி மாவட்ட ஊடகவியலாளர்களையே சாரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை!

சுனாமி கடல் அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்திவேண்டி அண்மையில் ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சபாரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இதில் அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பானர் கரிகாலன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் சுனாமி அனர்த்த சம்பவ விடியோ காட்சி காண்பிக்கப் பட்டது.


# அடிப்படை வசதிகளற்ற நிலையிலுள்ள சொர்ணபுரி, வேட்டையாம் முறிப்பு கிராம மக்கள்

(மன்னார்)

மன்னார் - சொர்ணபுரி, வேட்டையாம் முறிப்புக் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராமங்களில் மக்கள் மீளக்குடியேறி இரண்டரை வருடங்கள் கடந்த நிலையில், இங்கு 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றன. எனினும், இவர்கள் - போக்குவரத்து, மருத்துவ - சுகாதார வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்கள் தமது போக்குவரத்து, மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு சுமார் 7 கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.



*சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தர்மகேணி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம்.*



*தாளையடி கடற்கரையில் சுனாமி அனர்த்தத்தால் காணாமற்போன உறவைத் தேடும் ஒருவரைப் படத்தில் காணலாம்.*



## வன்னிப் பதிவுகள்

### கடற்தொழில் சமாசம் இயங்குகிறது

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சமாசம் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தாளையடி பிரதேசத்தில் தனியார் வீடொன்றில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் இயங்கிவருகிறது.

இந்த சமாசத்தில் உள்ள அனைத்து கடற்தொழிலாளர் சங்கங்களினாலும் அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள இழப்பீடுகள், தொழில் உபகரணங்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு வடமராட்சி கிழக்கு சமாசத்தினர் கேட்டுள்ளனர்.

### சிறுவனின் சடலம் மீட்பு

உடுத்துறை பிரதேசத்தில் இயற்கை அனர்த்தத்தால் சிக்குண்டு உயிரிழந்த சிறுவன் ஒருவனின் சடலம் கடந்த 8 ஆம் திகதி மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு, தாயாரின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் புதைக்கப்பட்டது.

### பண்டிநெல் அழிக்கும் நடவடிக்கை

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரியான், பரந்தன், முரசுமோட்டை ஆகிய பிரதேசங்களில் விவசாயச் செய்கையில் பண்டிநெல் களைகள் தீவிரமாகப் பரவியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதனால் விவசாயச் செய்கையில் பெரும் பாதிப்பு எற்படலாம் எனக் கருதப்படுகிறது. இவ்வறான களைகளை அழிப்பதற்கான நடவடிக்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும், விவசாயிகளும் ஈடுபட்டுள்ளனர்.

### காணிப் பிரச்சினைகளை தீர்க்க முயற்சி!

ஸ்கந்தபுரம், கண்ணகிபுரம், அக்கராயன் கிராம மக்களின் காணி சம்பந்தமான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவுள்ளன.

கரைச்சி பிரதேச செயலக பிரிவால் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை ஸ்கந்தபுரம் உப பணிமனையில் இந்த நடவடிக்கை நடைபெறவுள்ளது.

இதனால் குறிப்பிடத்தக்க அளவு காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புதுக்குடியிருப்பு நலன்புரி நிலையத்திலுள்ள ஒருபகுதி மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிதி

சுனாமி அனர்த்தத்தால் புதுக்குடியிருப்பு பிரதேச நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களில் ஒரு பகுதினருக்கு உயிரிழந்தவர்களுக்கான 10 ஆயிரம் ரூபா மரணச் சடங்குக் கொடுப்பனவு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு வழங்கப் படாதவர்களுக்கு அரசின் நிதி கிடைத்தவுடன் வழங்க இருப்பதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 580 பேர் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்றுள்ளனர். ஏனையவர்களின் விபரம் திரட்டப்பட்டு வருகிறது. இறப்புகள் மேலும் அதிகரிக்கலாம்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதில் 950 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளனர். ஏனையவர்கள் தனியார் வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அரச திணைக்கள சமூகசேவை திணைக்களத்தால் இவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், சமூக சேவைத்திணைக்களம் உதவி வழங்குவதாக உறுதி கூறியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா கல்வியியற் கல்லூரி எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பம்

வவுனியா கல்வியியற் கல்லூரி எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவிருப்பதாக, வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி பேனாட் தெரிவித்தார்.

தற்போது கல்வியியற் கல்லூரி ஆரம்பமாக இருப்பதன் காரணமாக, மாணவர்களை மீண்டும் தமது விடுதிகளுக்கு வருமாறு அவர் கேடடுள்ளார். சுனாமி அனர்த்தம் காரணமாக இது பிற்போடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களில் வட- கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் உடனடியாக வவுனியா வளாக மாணவர் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு மாணவர் தலைவர் கரிகரன் கேட்டுள்ளார். விசேட விடுமுறை பெற்றுக் கொடுப்பதற்காகவே இவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக வவுனியா வளாகத்தின் அதிபர் திருமதி மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வியாபாரக் கற்கை நெறிக்கான பாடங்கள் 17 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது வெளியிடங்களில் இருக்கும் மாணவர்கள் மீண்டும் தமது இடங்களுக்கு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள் திடீர் இடமாற்றம்

மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகக் கடமைபுரிந்த மேரி இமெல்டா சுகுமார் - மன்னார் மாவட்டத்துக்கும், மன்னார் மாவட்ட அரச அதிபராகக் கடமைபுரிந்த வே. விஸ்வலிங்கம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று அந்தந்த மாவட்டங்களில் பதவியேற்கவுள்ளனர். இவர்களின் திடீர் இடமாற்றத்துக்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவரவில்லை.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஜனவரி 12**

1863:- சுவாமி விவேகானந்தர் பிறந்ததினம் இன்றாகும்.

1920:- ரொபேர்ட் காடார்ட் என்ற பேராசிரியர் ஸ்மித்ஸோனியன் ஆய்வு மையத்துக்கு எழுதி அனுப்பிய "மிக உயரமான இடத்தை எட்டும் வழிமுறைகள்" என்ற ஆய்வுக்கட்டுரை ஒன்றைப்பற்றி, "பொஸ்டன ஹெரோல்ட்" என்ற பத்திரிகை "பேராசிரியர் காடார்ட்டின் ஏவுகணை நிலாவில் மோதும" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்தது. சந்திர மண்டலப் பயணத்துக்கு பிள்ளையார் சுழி இட்ட ஆய்வுக்கட்டுரையாக இது கருதப்படுகிறது.

1970:- நைஜீரியா நாட்டில் 31 மாதங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த தினம் இன்றாகும். இந்த உள்நாட்டுப் போரில் இ.போ. இனத்தைச் சேர்ந்த சிறுவர்கள், குழந்தைகள் உட்பட இருபது லட்சம் பேர் - கொல்லப்பட்டிருந்தனர்.

1972:- பங்களாதேஷின் முதலாவது பிரதமரான ஷேக் முஜிபுர் ரஹ்மான் இன்று பதவியேற்றார்.

1986:- அமெரிக்காவின் விண்வெளி ஓடம் கொலம்பியா கொமாண்டர் ரொபேர்ட் இங்சன் தலைமையில் விண்வெளி நோக்கிச் சென்ற நாள்.

1992:- 1975 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த போரில் கொல்லப்பட்ட அமெரிக்க வீரர்களின் அஸ்திகளைக் கம்போடியா அரசு இன்று அமெரிக்காவிடம் கையளித்தது.

1992:- போலியோ தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த (வாய்வழி தடுப்பு மருநது) டொக்டர் கெர்ஹார்ட் ஜோப்பிக் இன்று மரணமடைந்தார்.

★ தன்சானியா தேசத்தினது புரட்சிநாள் இன்றாகும்.

★ சர்வதேச இளைஞர் தினம் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்*
*செப்பவும் நாணும் ஒருங்கு.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## சர்வதேசம் சிந்திக்கத் தொடங்கியுள்ளது...!

சுனாமி ஆழிப் பேரனர்த்தமானது இலங்கையின் கரையோரப் பகுதி வாழ் மக்களின் இயல்பு வாழ்வை நிர்மூலமாக்கி, எண்ணிப்பார்க்கவே முடியாத அளவுக்கு பன்முகப் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ள அதேவேளை - இலங்கையின் அரசியலிலும் அது பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

சுனாமி அழிவுகளை அரசியல் உள்நோக்கத்துடன் பயன்படுத்தும் வகையில் தீவிரமாக செயற்பட்ட அரசு அதற்காக கையாண்ட மூலோபாயத் தவறுகள் காரணமாக அது எதிர்பார்த்ததற்கு மாறான பல விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

இயற்கை ஏற்படுத்திய அழிவுகளுக்கு பெரிய அளவில் இரையாகி நிற்கும் வடக்கு - கிழக்கு தமிழர் வாழ்விடப் பிரதேசங்களல், அத்தியாவசிய புனர்வாழ்வு மற்றும் நிவாரணம் வழங்கல் பணிகளில் காட்டிய மாற்றாந்தாய் அணுகுமுறையும் தமிழர் பகுதிகளுக்கு நேரடியாகக் கிடைக்கக் கூடியதான சர்வதேச நிவாரண உதவிகளை தடுக்க கையாண்ட வழிமுறைகள் - குறிப்பாக நிவாரணப் பணிகளை படைத் தரப்பிடம் ஒப்படைத்த தந்திரோபாய உத்தி - அரசினதும், ஜனாதிபதியினதும் பேரினவாத குணாம்சத்தை மிகத் தெளிவாகவே வெளிப்படுத்திவிட்டதென்றே கூறவேண்டும்.

ஆரம்பத்தில் இத்தாலிய அரசாங்கம் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களையும், அதனை வழங்குவதற்கான இராஜதந்திரிகளையும் மனிதநேய அக்கறையுடனும் உடனுதவும் மனோபாவத்துடனும் சுனாமியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு அனுப்பியதையே மிகவும் குறுகிய மனிதாபிமானமற்ற - கலாசாரமற்ற - தன்மையில் அரசும் அதன் பிரதான பங்காளிக் கட்சியினரான ஜே.வி.பியினரும் கண்டித்த விதமானது தமிழர் பகுதிகளுக்கு எவரும் நேரடியாக மனிதாபிமான உதவிகளையோ வேறு அத்தியாவசிய உதவிகளையோ வழங்குவதை சகித்துக்கொள்ளமுடியாத அவர்களின் குரூர மனத்தையே வெளிப்படுத்தியது.

எல்லாவற்றிலும் உச்சமான பேரினவாத நடவடிக்கையாக அமைந்தது - ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபிஅனான் அவர்களை சுனாமியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வட பகுதிக்கு - அங்கு சுனாமி ஏற்படுத்திய அழிவு அனர்த்தங்களை நேரில் சென்று பார்வையிட ஜனாதிபதி அர்த்தமற்ற காரணங்களைக் கூறி தடுத்தமையே ஆகும்:

இப்போது பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்புத்தேடி ஒதுங்கியுள்ள நலன்புரி நிலையங்களை தமதுவசம் - தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், அதனையடுத்து அச்சம் காரணமாக அந்த நிலையங்களை விட்டு அவல நிலையில் வெளியேறி அந்தரப்பட்டு, அச்சப்பட்டு நிற்கும் பரிதாபத்திற்குரிய வடக்கு - கிழக்கு வாழ் அப்பாவிப் பொதுமக்களின் நிலையும், இலங்கை அரசுமீதான சகல விதமான நம்பிக்கையையும் இழக்க வைத்துள்ளதென்றால் அது மிகையில்லை.

இந்த நிலையில் இந்த காருண்யமற்றதும், ஏற்கனவே நிவாரணப் பணிகளை சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட அடுத்த சில மணித்துளிகளுள் ஆரம்பித்த மனிதநேய அமைப்புகளின் சேவைகளைப் புறந்தள்ளும் தன்மை கொண்டதுமான அரச படைகளின் நலன்புரி நிலையங்களை தம்வசமாக்கி நிர்வாகத்தைப் பொறுப்பெடுக்கும் நடவடிக்கையின் நியாயமற்ற செயற்பாடுகளை இப்போது சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியுள்ளது என்றே தோன்றுகின்றது.

இலங்கை அரசு ஏற்கனவே சமாதானம் தொடர்பான முயற்சிகளில் காட்டும் பாசாங்குத்தனம் - சர்வதேச சமாதான விரும்பிகளால் நன்கு உணரப்பட்ட நிலையில் சுனாமி அனர்த்தங்களையும், அரசியல் இலாப நோக்குடன் கையாளும் அதன் போக்கையும் மௌனமாக ஆனால் உன்னிப்பாக கவனித்துக் கொண்டே உள்ளது என்பதை இவ்வாரம் வெளியான பிரபலமான சர்வதேச சஞ்சிகையான 'நியூஸ் வீக்' ஆங்கில ஏடு தெரிவித்துள்ள செய்தி மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இலங்கை அரசாங்கம் விரும்புகின்றதோ, இல்லையோ இன்றைய சூழலை கவனிக்கும்போது, சர்வதேச நாடுகள், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உறவுகளை மேற்கொள்ளும் புதிய அனுகூலமான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாகவும், விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள நாடுகளும்கூட தற்போது அவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள முயன்று வருவதாகவும் - எழுதியுள்ள விடயமானது இலங்கை அரசுக்கு நிச்சயம் மகிழ்ச்சி தரும் செய்தியே அல்ல.


சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் பிரதிநிதிகள் - தமிழ்ப் பிரதிநிதிகளை சந்தித்துள்ளனர் என்பதை உறுதிசெய்துள்ள சுனாமி நிவாரணப் பணிகளை கையாளும் அமெரிக்க அதிகாரிகள் - விடுதலைப் புலிகள் தமது மனிதநேயப் பணிகளை தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது என்றும் கூறியுள்ளமை விடுதலைப் புலிகளுடன் இணங்கி பணியாற்ற முனையும் அவர்களின் உள்நோக்கை வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்கப் படைகள் இலங்கை வருவதை தாம் எதிர்க்கவில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதையும் கவனத்தில் கொள்கையில், சர்வதேச மட்டத்திலான விடுதலைப் புலிகள் குறித்த இரு தசாப்தகால அரசின் பொய்ப்பிரசாரங்கள் பிசுபிசுத்துப் போகத் தொடங்கியுள்ளதென்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

சுனாமி அனர்த்தப் பரபரப்பில் சமாதானம் குறித்த விடயங்கள் ஓய்ந்துவிட்டதுபோல தோன்றினாலும் அரசு நினைப்பதைப் போன்று அது சர்வதேசத்தால் மறுக்கப்பட்டு போகும் விடயமாக இருக்கப்போவதில்லை.

சமாதானம் குறித்த விடயம் மீண்டும் எழுச்சிகொள்ளும் போது, அரசின் இன்றைய நேர்மையற்ற அரசியல் யுக்திகள் யாவும் அதற்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தப் போவதை வரலாறு பதிவு செய்யக் காத்திருக்கிறது என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகவும் உள்ளது.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அனானுக்குப் போட்ட தடை அம்மாவின் அம்மா காட்டிய நடைமுறையே!

ஐ. நா. செயலாளர் நாயகம் கொபி அனான் வடபகுதிக்கு வராமலேயே திரும்பச்சென்று விட்டார்.

ஏன் வரவில்லை என்பதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் சொல்லுகின்றனர்.

அனான் வடபகுதிக்குச் செல்வதை சிங்கள பௌத்த மேலாண்மை அனுமதிக்காதென்பது முன்னரே தெரிந்ததுதான்.

இதனால்தான் கடைசி நிமிடம்வரை' தமிழ்மக்கள் தரப்பில் சுனாமி அனர்த்தத்தால் பெரும் அழிவுகளுக்குள்ளான வடககு - கிழக்குப் பகுதிகளையும் நேரில் வந்து பார்த்துப்போகும்படி கோரிக்கை விடுத்துவந்தனர்.

கொபி அனான் பார்க்க வேண்டிய அனர்த்த அழிவுகளை விட, சிங்களபௌத்த ஆதிக்க சக்திகளின் "அனர்த்தங்களை" இன்று உலகம் முழுவதும் அறிந்துகொள்ள முடிந்திருக்கிறது.

இது இப்பொழுது சந்திரிக்கா ஆட்சியில்தான் இலங்கையில் நடந்திருக்கும் சம்பவமல்ல.

1970 ஆம் ஆண்டுகளில் கொழும்பில் சர்வதேச நாடாளுமன்ற பிரதிநிதிகளின் மாநாடொன்று நடந்தது.

கொழும்பில் பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் நடந்த இந்த மாநாட்டுக்கு, உலகின் பல நாடுகளையும் சேர்ந்த நாடாளுமன்ற சபாநாயகர்கள், பிரதிநிதிகள் என்று பலரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அந்தச் சமயம் இலங்கையில் சந்திரிகாவின் அம்மா சிறிமா பண்டாரநாயகாவின் அரசு ஆட்சியிலிருந்தது. அந்த மாநாட்டில் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் கலந்துகொண்டார். இந்தியாவில் எதிர்க்கட்டசித் தலைவராக இருந்த வாஜ்பாயும் கலந்து கொண்டார்.

மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசி, தமிழர் தாயகத்துக்கும் அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் சென்று பார்வையிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

இதற்கு வர்ஜ்பாயும் சம்மதம் தெரிவித்தார். மாநாடு முடிவடைவதற்கு முன், பிரதிநிதிகள் நாட்டில் விரும்பிய இடங்களுக்குச் சென்று பார்த்தும், பேசுவதற்கும் வழக்கம்போல ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வாஜ்பாயும் மற்றும் சிலரும் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஒழுங்குசெய்யப்பட்டது.

கொழும்பிலிருந்து விமானத்தில், வாஜ்பாய் குழுவினருடன் தமிழ் அரசுக்கட்சியைச் சேர்ந்த வி.என்.நவரத்தினமும் மற்றும் இரண்டொருவரும் யாழ்ப்பாணம் வந்தனர்.

வாஜ்பாய் குழுவைத் தமிழரசுக் கட்சியினரே யாழ்ப்பாணம் அழைத்துவருவதாகவே இந்த ஏற்பாடு அமைந்திருந்தது.

வெளிநாட்டுப் பிரமுகர்கள் ஒரு நாட்டுக்கு வந்தால், அவர்களுக்கு வழிகாட்டியாகவும், அவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் அரசாங்கத்தின் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இவரை புரட்டக்கோல் **(Protocol)** என்று அழைப்பார்கள். வாஜ்பாய் குழுவுக்கும் ஒரு புரட்டக்கோல் பொறுப்பாக விமானத்தில் அவர்களுடனேயே வந்தார்.

யாழ்ப்பாணத்தில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியதும், அவர்களுக்கு ஒரு தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், தமிழரசுக் கட்சி எம்.பி.வி.என்.நவரத்தினம், வாஜ்பாயிடம் சொல்லித் தங்களுடன் வருமாறு அழைத்தார்.

இதே விமானத்தில் வந்த அரசின் "புரட்டக் கோல்" அதற்கெல்லாம் நேரமில்லையென்றும், தங்களுடனேயே வாஜ்பாய் குழு நிற்க வேண்டுமென்றும், வேறு எந்த நிகழ்ச்சிக்கும் செல்வதற்கு இடமில்லையென்றும் தெரிவித்து, வாஜ்பாய் குழுவை தம்முடன் வருமாறு கேட்டார்.

வாஜ்பாய் எதுவும் சொல்ல முடியவில்லை. இப்பொழுது கொபி அனான் சொன்னதுபோல இவரும் அரசின் விருந்தினராகவே வந்திருந்தார்.

விமான நிலையத்தில் வி.என்.நவரத்தினத்திடமும் தமிழரசுக்கட்சி எம்பிக்களிடமும் வாஜ்பாய் பிரியாவிடை பெற்றார்."நான் அடுத்தமுறை தனிப்பட்ட முறையில் யாழ்ப்பாணம் வருவேன். அப்பொழுது தமிழ்மக்களையும், அவர்கள்வாழும் இடங்களையும் பார்ப்பேன். அவர்களுடன் பேசுவேன் என்று சொல்லி விடைபெற்று "புரட்டக்கோலுடன்" சென்றார்.

வாஜ்பாய் அதன்பின் தனிப்பட்ட முறையிலும் வரவில்லை. பிரதம மந்திரியாக பதவியேற்ற பின் உத்தியோக ரீதியிலும் யாழ்ப்பாணம் வரவில்லை! யாழ்ப்பாணமே அவருக்கு நினைவிருக்காது.

வாஜ்பாய் வந்த காலத்தில் இங்கு விடுதலைப் புலிகள் இருக்கவில்லை. போர்க்களமும் இருந்ததில்லை. இந்தியாவின் காந்தி காட்டிய வழியில் அகிம்சையைப் பின்பற்றிய செல்வநாயகம் தலைமையில், ஜனநாயக வழியில் சென்ற இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிதான்.

தமிழர் தாயகத்தில் மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தது.

அன்றைக்கு அம்மாவின் ஆட்சியிலேயே வாஜ்பாய், யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களைப் பார்த்துப்போகவும், பேசவும் தேநீர் விருந்தில் தமிழர்களின் விருந்தோம்பலை ஏற்கவும் இடமிருக்கவில்லையென்றால், இன்று சுனாமி அனர்த்தத்தின் பின் மகள் சந்திரிகா அனுமதிப்பாரா?

இதுமட்டுமல்ல 1950 ஆம் ஆண்டுகளில் தொண்டமானாறிலிருந்து, இந்தியாவின் கோடிக்கரைக்கு நவரத்தினசாமி என்ற நீச்சல் வீரன் முதல் தடவையாக நீந்திச் சென்று உலக சாதனை படைத்தார்.

இந்தச் சாதனையைப் பெரும் தயக்கத்துடன் பலநாட்கள் கழித்து இலங்கையில் அன்று ஆட்சியிலிருந்த சேர்.றோண் கொத்தலாவலையின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு பாராட்டுத் தெரிவித்தது.

இதன்பின் பிரதமர் சோ.ஜேணின்வாசஸ் தலத்தில் நடந்த ஒரு வைபவத்தில் நீச்சல் வீரன் நவரத்தினசாமியை பிரதமர் வரவேற்றுப் பாராட்டுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார். நீச்சல் வீரனும் அங்கு சென்றிருந்தார். ஆனால் அந்த நிகழ்ச்சியில பிரதமர் நவரத்தினசாமியைக் கைகுலுக்கிப் பாராட்டுவதை புகைப்படம் எடுப்பதற்கு அனுமதிக்கவே மறுத்து விட்டார்கள்.

இது தான் சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகள் தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் மதிப்பும், மரியாதையும் இதைத்தான் அவர்கள் இன, மத, மொழி பாகுபாடற்ற ஒருமைப்பாடு என்று சொல்லுகிறார்கள்.

இன்றும் இலங்கை மக்கள் மத்தியில் சுனாமி பேரலைகள் பேதங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டதாகச் சொல்லி உலகையே ஏமாற்றுகிறார்கள்.

அவர்களுக்கென்று ஒரு நாடு இருக்கிறது. அவர்களுக்கான மொழி அரச மொழியாக இருக்கிறது. அவர்கள் சொல்வதை உலகமும் நம்பும்.

சிங்கள பௌத்த மேலாண்மைவாத ஊடகங்கள் இயற்கை அனர்த்தத்தை மறந்துவிட்டதாகவே நடந்து கொள்கின்றன.

கையேந்திப் பிச்சை எடுக்கும் நிலையிலிருந்த சந்திரிகா அரசுக்கு சுனாமி பேரலைகள் உதவி என்ற பெயரில் அள்ளிக்கொடுக்கும் கொடை வள்ளலாகவுமிருக்கின்றது. ஜே.வி.பியின் விமல் வீரவன்ச இதுதான் புலிகளைப் பேச்சுக்கு இழுக்கவேண்டிய தருணம் என்று ஆலோசனை சொல்கிறார்.

அஸ்கிரிய பீடாதிபதியும் அனுஸானம் வழங்குகிறார். எல்லாமே இலவசமாக வந்து கொட்டும்போது சுனாமியின் பேரழிவில் மாண்டவர்களைப் பற்றியோ, உறவுகளைப் பலிகொடுத்து பதறி நிற்கும் மக்களைப் பற்றியோ இவர்களுக்கென்ன கவலை?

நாங்கள் மட்டுமென்ன? இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்கு 1977 இல் தமிழ் மக்களிடம் ஆணைகேட்டுப் பெற்று. நாடாளுமன்றத்தில் ஆறாண்டுகள் பதவி வகித்தோம். கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றப் பதவிக்குத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றதால் வெற்றி பெற்றவர்கள் நியாயமான முறையில் வெற்றிபெறவில்லையென்று நீதிமன்றக் கதவைத் தட்டி தடுத்துநிற்கிறோம். ஆனாலும் எனக்குப் பதவி ஆசை இல்லையென்று இன்றும் சங்கூதிக்கொண்டு சகுனிவேலை செய்து கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்டவர்களும் நம்மிடையே இருக்கும்போது மற்றவர்களைச் சொல்லி என்னபயன்?

பகுதி VI — சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...



வசேட அதிரடிப்படைப் பொறுப்பதிகாரி உபுல் செனவிரத்னவால் இவ்வாறு அந்தக் கல்வெட்டில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அல்லது தேசத்தின் தந்தை ஆகியோரது கூற்றுக்களையே இவ்வாறு பொறிப்பது வழககம். ஆனால் இங்குள்ள நிலைமை அபாயகரமான போக்குக்குள் நாடு போவதைச் சுட்டிக் காட்டுகிறது.

இதேவேளை ஜனாதிபதி புனர்நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பாக இராணுவ அதிகாரிகளை நியமிப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறான சம்பவம் இனி நடக்காது எனப் படையினர் பெரியளவில் உறுதிமொழி தரவில்லை எனக் கௌசல்யன் குறிப்பிட்டதற்கும், இந்த அறிவிப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை உணரமுடிகிறது.

"சுனாமி அலையின் சாட்டோடு இராணுவ மேலாதிக்கத்தைத் திணிக்கும் நடவடிக்கை இது.

"ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே
காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே"

என்று எங்கள் ஆச்சி அடிக்கடி பாடுவார்.

சடலங்கள் மீட்கும் பணி தினசரி நடந்து கொண்டேயிருக்கிறது. நாளாந்தம் எடுக்கப்படும் சடலங்கள் எரிக்கப்பட்டே வருகின்றன. இவற்றைத் தூக்க முடியாது. சடலத்துக்கு மேலே கடல் அலையாய் வந்த கஞ்சல்கள், கழிவுகள், தடிகள, மரங்கள் என்பவற்றுடன் நிலத்தில் தண்ணீர் கிடந்தால், சீனியும் போட்டு எரிக்கப்படுகின்றன. திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயிலுக்குக் கிட்ட இவ்வாறு இரண்டு சடலங்கள் எரிக்கப்படுவதைக் கண்டேன். திருக்கோயிலில் சுற்று மதில்கள் பெயர்த் தெறியப்பட்டுக் கிடந்தன. குருக்களின் குடியிருப்பும் நொருங்கிப் போயிருந்தது. இழப்பு அவர்களின் குடும்பத்திலும் ஏற்பட்டது. மிகவும் அழகான இந்த ஆலயம் இப்போது அலங்கோலமாகக் காணப்பட்டது.

இந்த ஆலயத்துக்கு இந்து கலாசார அமைச்சின் உதவி கிடைககுமென்பது கொஞ்சம் சநதேகம தான். ஆனால் கிடைத்தால் வரவேற்கக் கூடியதுதான். திருக்கோயில் என்ற பெயருக்கும் இந்து கலாசார அமைச்சுக்கும் அவ்வளவு நெருடல் உண்டு.

டக்ளஸ் தேவானந்தா திருக்கோயில் மக்கள் வங்கிக் கிளையில கொள்ளையடித்துக் கொண்டு ஓடுகையில், அந்த ஊர்வாசிகளால் பிடித்துக் கொடுக்கப்பட்டுச் சிறையில் இருந்தவர். 1983ஆம் ஆண்டு நடந்த மட்டு - சிறையுடைப்பின் பின்னரே வெளியில் வந்தவர்.

அந்த மக்கள் வங்கிக் கிளையிலும், தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள இடம் பெயர்தோர் முகாமிலும், அதனுடன் இணைந்த போராளிகளின் முகாமில் மட்டுமே ஜெனரேட்டர் மூலம் மின்குமிழ் எரிவதைக் காணமுடிகிறது. இங்கு ஜெனரேட்டர் பற்றிப் பெரிதாக எவரும் சிந்தித்திருக்கவில்லை. அதனால் இப்போதைய மின் தடை பெரிதாகப் பாதிக்கிறது.

கடற்கரை வழியாக வந்து திருக்கோயிலின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான ஆனந்தப் போடியாரின் வீட்டைப் பார்ப்பதற்கு வந்த சமயம் - எஞ்சியிருக்கும் தென்னைகளுக்கு மத்தியில் சிலர் நின்றனர். அவர்கள் எதையோ உடைக்கும் சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்தேன். ஒரு தொலைக்காட்சியை உடைத்து அதன் SPEAKER ஐ எடுத்துக கொண்டிருந்தது அந்தக் கும்பல். "நீங்கள் யார்? எனக் கேட்டேன். "கண்டியிலே இருந்து வந்து ஸ்பெசல் பொலிஸ்ரீம் என்றார்கள். நாம் கணடு விட்டதால் " இத முதலே யாரோ உடைச்சது தானே'' என்றும் சமாதானம் சொன்னார்கள். வன்னியில் என்றால் இதற்கு என்ன நடக்கும் என எண்ணிக் கொண்டேன்.

***

ஆனதப் போடியாரின் வீடு பெரும்பகுதி உடைந்து காணப்பட்டது. இயந்திரங்கள் இடிபாடுகளினுள் கிடந்தன. அப்படியே வந்து அவர் தற்போது தங்கியிருக்கும் கடைத் தொகுதியின் மேல்மாடிக்குச் சென்றேன்.

"எவ்வாறு தப்பினீர்கள்'' என அவரைக் கேட்டேன்."கடல் வருகுது எண்டு ஒருத்தன் சொன்னான். இதென்ன புதுக்கதையாக்கிடக்கு என்று பாத்தா. உண்மை தான் மோட்டார் சைக்கிளைத் திருப்பி இவாவை (துணைவியாரை) சேர்ச்சில் இருந்து ஏத்திக் கொண்டு வந்து மாடிக்கு வந்து சேர்ந்திட்டன், இந்தப் பகுதியில இருந்து கனபேர் இந்த மாடியில் ஏறி நிண்டதால தப்பிட்டினம்.

முதல் அடியோட கனபேர் ஓடி வந்திட்டினம். ரெண்டாவது அடி உயரம், அதோடதான் வீடுகள் விழுந்தது. எங்கட வீட்டில உதவிக்கு நிண்ட பிள்ளைகள் மூணடு என்னபாடோ எண்டு பயந்து கொணடிருந்தன். அதோட அம்மாவும் கூட. அவ வீட்டில முதல் அடியில் ஒரு அலுமாரியைத் தள்ளி விழுதத, அது தண்ணியில உயந்து மிதந்தது. அதில இவை ஏறினவை. அப்படியே முகட்டில பிடிச்சுச் தொங்கினவை'' என்றார். உங்கட அம்மாவும் தொங்கினவவோ? என்று கேட்டேன். 'ஓம்' என்றார் அவவுக்கு எத்தனை வயசு என்று கேட்டதற்கு என்பத்தைஞ்சு என்றும் பதிலளித்தார் அவர்.

"ஓ வெண்டு சோலை போலிருந்த எங்கட வீடு - இப்ப ச்வச் காலையாக்கிடக்கு'' என்றார் அவரின் துணைவியார். இந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது.

"இது ஒரு யுகமாற்றம் தான். ஐநூறு வருடத்துக்கு ஒருக்கா இப்படி நடக்குமெண்டு நான் ஒரு புத்தகத்தில் படிச்சிருக்கிறன் என்றார் அவர்.

***

திருக்கோயில் பகுதியில் நான் கண்டு மற்றும் கேட்டறிந்த விடயங்களில் சில பின்வருமாறு.

1) நோர்வேயில் இருந்த கணவன் பிள்ளைகளுடன் கிறிஸ்மஸ் கொண்டாட வந்த ஜெயராணி என்பவர் பலியாகியுள்ளார். இந்த அதிர்ச்சியுடனேயே குடும்பத்தினர் நோர்வேக்கும் பயணமாகியுள்ளனர்.

பாரிசவாதம் வந்த கேதாரம் கட்டிலில் படுத்தபடுக்கையாகக் கிடந்தார். தண்ணீரில் தப்புவதற்காக அவரின் மகளும், மனைவியும் கதவில் தொங்கிக் கொண்டிருந்தனர். கட்டில் மேலே உயர்ந்து தொட்டில் போல ஆடிக் கொண்டிருந்தது. கட்டில் கீழேவிழுந்து விடாதபடி அதையும் கையால் பிடித்தபடி இவர்கள் தொங்கினர். ஒரு தொட்டிலில் தூங்குவது போன்ற நிலையில் தண்ணீருள் இவர்கள் இறங்கினர்.

3) தன்னிரு பிள்ளைகளைக் கொண்டு ஓடிய பெண்மணியின் முதுகில் நெல் மூட்டை ஒன்று விழவே குழந்தையைக் கைவிட்டார்.

4) திருநாவுக்கரசு நாயனார் குருகுல சிறுவர் இல்லப் பிள்



ளைகள் 42 பேர் - திருவெம்பாவைப் பஜனைக்குச் சென்றிருந்தபடியால் தப்பினார்கள். இவர்கள் போட்ட அலறல், பலர் தப்பியோட உதவியாக இருந்தது. கால் இயலாத மகிந்தகுமார் (வயது 15) என்ற பிள்ளை குருகுலத்திலே தங்கியிருந்தால், அவர் பலியாகினார். இந்த அனர்த்தத்தில் சமயலறையில் இருந்த கந்தையா, சிவப்பிரகாசம் சங்கர் ஆகியோர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

5)கடலுக்குச் சென்ற இருவர் திடீரென்று நடுக்கடலில் படகு குத்தென்று நிற்கக் கடலைக் காணாமல் அதிசயித்து நின்றுள்ளனர். இறங்கிச் சில அடிகள் நடந்த போது, போன அலை அதே வேகத்தில் திரும்பிவர படகைத் தள்ளித் தண்ணீரில் ஏறி மீண்டும் கரைக்கு வரமுடிந்துள்ளது. நடுக்கடலில் நடந்தது தாங்களாகத்தான் இருக்கமுடியும் என்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான கதைகளில் ஒரு சிலவே இவை.

***

திருக்கோயில் காயத்திரி கிராமத்தில் ஒரு பெரிய இடம் பெயர்ந்தோர் முகாம் இயங்கி வருகிறது. இது முன்னர்"டயஸ் கிராமம்'' என்று அழைக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக மேஜர் டயஸ் விளங்கிய காலத்தில் கடற்கரைப் பகுதியில் கஷ்ட நிலையில் வாழ்ந்த பலரை இங்கு குடியேற்றத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தார். அவரது நினைவாகவே இது டயஸ் கிராமம் என அழைக்கப்பெற்றது. மலையை அண்டிய பிரதேசமாக இருந்ததால், அங்கு குடியேறியோர் மற்றும் அவர்களின் வழித் தோன்றல்கள் சுமார் 800 பேர் இந்த அனர்த்தத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தப்பியுள்ளனர்.

பிற்காலத்தில் அதிரடிப் படையினரின் தொல்லைகள் காரணமாக இந்தக் கிராமத்தின் பெயரை காயத்திரி கிராமம் என்று மாற்றியுள்ளனர். மலையில் கோயில் ஒன்றை அமைத்துக் காயத்திரி கிராமம் என்று அழைக்கின்றனர். இங்குள்ள இடம் பெயர்ந்தோர் முகாமை ஜெயபாலன் என்ற பட்டதாரி இளைஞன் நிர்வகித்து வருகிறார். "சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான பல்கலைக் கழக மாணவர் சங்கம் என்ற அமைப்பின் பெயரால் முற்று முழுதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் இந்த முகாம் இயங்கி வருகிறது. இதனுடன் இணைந்து பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் பணியாற்றுகின்றனர். (தொடரும்)

# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

## கும்பம்

கும்பராசி அன்பர்களே! சனிபகவான் உங்களுக்கு ஆட்சிக் கிரகம். சூரியன், புதன், குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்களை நட்பாகக் கொண்டவர்கள். மதிப்பும், மரியாதையும், கௌரவமும் உங்கள் உடன் பிறந்தவை. இதனை விட்டுக் கொடுக்கமாட்டீர்கள். உங்களுக்கு இந்த ஆண்டு மிக சிறப்பாக அமையும் கடந்த காலத்தில் குடும்பத்தில் எண்ணற்ற பிரச்சினைகள் வந்திருக்கலாம். மனைவி மக்களைப் பிரியும் நிலை உருவாகி, அதனால் மனதில் குழப்பம் ஏற்பட்டிருக்கலாம்.8 ஆம் இடத்திலுள்ள குரு கடந்த சில மாதங்களாக பணப்பற்றாக் குறையை ஏற்படுத்தி இருப்பார். 9 ஆம் இடத்தில் உள்ள கேது உங்கள் முயற்சியில் தடங்கலைத் தந்திருப்பார். அதே நேரம் 3இல் உள்ள ராகு சிறப்பான இடத்தில் உள்ளதால், தேவையான பொருளாதார வளத்தைக் கொடுத்திருப்பார்.

இப்படிப்பட்ட பிரச்சினைக்கு இந்த ஆண்டில் தீர்வு காணலாம். குறிப்பாக குடும்பநிலை மேம்படும். அதற்காக சில மாதம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் சனி வக்கிரத்தில் இருப்பதால், அலைச்சல் அதிகமாக இருக்கும். இந்த ஆண்டு முக்கிய கிரகங்கள் அனைத்தும் பெயர்ச்சி அடைகின்றன. முதலில் பெப்ரவரி 28 ஆம் திகதி ராகு - கேது இடம் மாறுகிறார்கள். ராகு 3 இல் இருந்து இரண்டுக்கு வருவது அவ்வளவு சிறப்பானது அல்ல. அவர் வீண் அலைச்சலைத் தருவார். கேது 9 இல் இருந்து 8 ஆம் இடத்துக்குச் செல்வதும் அவ்வளவு சிறப்பானது அல்ல. அவரால் இருந்து வந்த தடைகள் அகலும். ஆனால் உடல் நலனில் சிறுசிறு பாதிப்பை ஏற்படுத்துவார். சனிபகவான் ஜூன் 27ஆம் திகதி மிதுனத்தில் இருந்து கடகத்துக்கு மாறுகிறார். இது மிகவும் சிறப்பைத் தரும். அவர் குடும்பப் பிரச்சினைக்குத் தீர்வு தருவார். பொருளாதார வளத்தையும் மேம்படுத்துவார். குருபகவான் செப்ரெம்பர் 14 ஆம் திகதி கன்னியில் இருந்து துலாமுக்குச் செல்கிறார். இதுவும் சிறப்பானதே. உங்கள் முயற்சிகளில் வெற்றியை தருவார்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும் போது, ஆண்டின் தொடக்கத்தில் ராகுவும் பிற்பகுதியில் சனி, குரு ஆகியோர் நன்மை தருவார்கள். எனவே இந்த ஆண்டு பிற்பகுதியில் அதிக நன்மை தருவார்கள். அந்த வகையில் விரிவான பலனைக் காணலாம்.

பல முக்கிய கிரகங்கள் சாதகமாக அமைய இருப்பதால், இது உங்களுக்கு பொற்காலமாக அமையும். சுப கிரகமும், பாவ கிரகங்களும் உங்களுக்கு நன்மை தரும் காலம். எனவே இதைப் பயன் படுத்தி முன்னேறுவது உங்கள் கையில், எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும் குறிப்பாக ஜூன் மாதத்தில் இருந்து அனுகூலங்கள் அதிகரிக்கும். உங்கள் முயற்சியில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் பெப்ரவரிக்கு பிறகு இருக்காது. பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும் தேவைகள் பூர்த்தி ஆகும் வீடு, நிலம் போன்றவை வாங்கலாம் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும்.

**குடும்பம் :-** வீட்டில் நிலவி வந்த கருத்துவேறுபாடு இந்த ஆண்டு இருக்கும்இடம் தெரியாமல் ஆகிவிடும். கடந்த காலத்தில் குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைக்கு ஆளாகி சீர்குலைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கலாம். சிலரது குடும்பத்தில் பிரிவு ஏற்பட்டிருக்கலாம். அல்லது ஏதோ காரணத்தால் தம்பதியினர் ஊர் விட்டு ஊர் பிரிந்திருக்க நேரிட்டிருக்கலாம். சனி ஜூன் மாதம் இடம்மாறிய பின் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் ஒற்றுமை ஏற்படும். கணவன் - மனைவி இடையே அன்பு அதிகரிக்கும். மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. செபரெம்பர் முதல் சுப நிகழ்ச்சிகள் அரங்கேறும். தடைப்பட்டு வந்த திருமணம் நடக்கும். சிலர் குழந்தைப் பாக்கியத்தைப் பெறுவர். வீட்டுக்கு தேவையான ஆடம்பரப் பொருட்கள் வாங்கலாம். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்குவர்.

**உத்தியோகம் :-** வேலைப்பளு அதிகரிக்கும். ஆனால் அதற்கேற்ற பலன்கள் கிடைக்கும். ஆண்டின் தொடக்கத்தில் சிலர் விருப்பம் இல்லாத இடத்துகக்கு மாற்றம கிடைக்கப் பெறலாம். எதிர் பார்த்த பதவி உயர்வு சிலருக்குக் கிடைக்காமல் போகலாம். முக்கிய கோரிக்கைகள் நிறைவேறாமல் போகலாம். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். ஆனால் செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு உஙகள் நிலை மிக உயரும். தடைப்பட்ட பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புண்டு. மேல் அதிகாரிகளின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

**வியாபாரம் :-** தற்போது வளர்ச்சியடைந்திருப்பீர்கள். லாபம் அதிகரிக்கும் சனி பகவான் ஜூன் 27 ஆம் திகதிக்குப் பிறகு சாதகமான இடத்துக்குச் செல்வதால், மேலும் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். தடைகள் அனைத்தும் அடியோடு மறையும். பகைவர்களின் தொல்லை இனி இருக்காது. அவர்கள் உங்களிடம் சரணடைவர். புதிய வியாபாரம் நல்ல வளர்ச்சி அடையும். அதே நேரம் அலைச்சல் அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். வேலை இன்றி இருப்பவர்கள் புதிய தொழில் தொடங்கலாம். அரசிடம் இருந்து கோரிக்கைகள் நிறைவேறி உதவி கிட்டும். சிலர் தங்கள் தொழிலை விரிவுபடுத்தவர்.

வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் சிலருக்கு வழக்கு இழுபறி நிலையில் இருந்தாலும், பிற்பகுதி உங்களுக்கு அனுகூலத்தைக், கொடுக்கும். கைவிட்டுப் போன் பொருட்கள் மீண்டும் கிடைக்கும்.

பெண்கள் ஆண்டின் தொடக்கத்தில் பொறுமையை கடைப் பிடிக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் விட்டுக் கொண்டுத்துப் போவது நல்லது. வாழ்க்கையில் எல்லையில்லா மகிழ்ச்சியைக் காண்பர். புத்தாடை, அணிகலன்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவீர்கள். பிறந்த வீட்டில் இருந்து சீதனங்கள் அதிகமாக வரும். வேலைக்குச் செல்வோர், மற்றும் தொழில் நடத்தும் பெண்கள் ஆண்டின் பிற்பகுதியில் நல்ல வளத்தைக் காண்பர். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் அதிகமாகக் கலந்து கொள்வீர்கள்.

உடல்நலம் சீராக இருக்கும். கேது சாதகமற்ற நிலையில் இருப்பதால் பித்தம், மயக்கம் போன்ற உபாதைகள் வரலாம். இதனைக் கருத்தில் கொண்டு முன்எச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபடுவது நல்லது.

**பரிகாரம் :-** ராகு - கேது திருப்தியற்ற நிலையில் இருப்பதால், பத்ரகாளி அம்மனை வழிபடுங்கள். பாம்புப் புற்றுக்கு பால் ஊற்றலாம. ஜூன் மாதம் வரை சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்யலாம். பெருமாள் கோவிலுக்குச் சென்று வாருங்கள், சந்தர்ப்பம் கிடைக்கும் போது, ஏதாவது ஒரு சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்குப் பூஜை செய்யலாம். செப்ரெம்பர் மாதம் வரை வியாழக் கிழமைகளில் தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

# ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதலில் 6 பொலிஸார் உட்பட 13 பேர் பலி!



(பாக்தாத்)

ஈராக்கில் சதாமின் சொந்த இடமான திக்றிற்றிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் ஆறு பொலிஸார் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் நேற்றுக் காலை நடத்தப்பட்டதாகவும் இதில் உயிரிழந்தவர்களின் தொகை கணக்கிடப்பட்டு வருவதாகவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ஓபிரைன் தெரிவித்தார்.


ஈராக்கிய பொலிஸார் தொடர்ந்து பலமுள்ளவர்களாக மாறிவருகையிலேயே அவர்கள் கிளர்ச்சிவாதிகளாலும், பயங்கரவாதிகளாலும் தாக்குதலுக்குள்ளாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாக்தாத்திலிருந்து 15 கி.மீற்றர் தொலைவிலுள்ள யுசிபியா எனுமிடத்தில் நடத்தப்பட்ட பாதையோர குண்டு வெடிப்பில் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன், ஒருவர் காயமடைந்தார்.

அமெரிக்க தொடரணியை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட போதும், அது தவறுதலாக பயணிகளை ஏற்றிச்சென்ற மினி பஸ்ஸைத் தாக்கியதனாலேயே இந்த எழுவரும் கொல்லப்பட்டனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஈராக்கில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு தற்போது தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட அமெரிக்க ஹெலி வீழ்ந்தது



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில், ஏஸ் மாநிலத் தலைநகரமான பண்டா ஏஸ்சில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஹெலிகொப்ரர் தரையில் விழுந்தது. அதிலிருந்த 4 இராணுவ வீரர்களும் உயிர்தப்பினர்.

இதனால் சிலமணி நேரங்களுக்கு ஹெலிகொப்ரர் மூலம் உதவிப்பொருள் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது.

## சீன சிறையிலுள்ள சாயோஷியாங் நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

1989 ஆம் ஆண்டு முதல் சீன சிறையில் அடைக்கப்பட்டுள்ள கம்யூனிஸ கட்சித் தலைவர் சாயோஷியாங் (வயது 85) நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் ஸ்திரமான நிலையில் உள்ளதாக சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

1989 ஆம் ஆண்டில் தியன்மென் சதுக்கத்தில் நடைபெற்ற ஜனநாயகம் கோரி மாணவர்களால் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு சாயோ ஆதரவு வழங்கினார் எனத் தெரிவித்து இவரை சீன அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்தது. அன்றுமுதல் இவர் சிறையிலேயே உள்ளார்.

இவரது உடல்நிலை தொடர்பாக கருத்துத் தெரிவித்த சீன வெளியுறவு அமைச்சு பேச்சாளர் கொங் குவான் - சாயோஷியாங் வயது போனவர். எண்பது வயதைக் கடந்தவர். அவர் நோய்வாய்ப்பட்டுள்ளார். ஆனாலும் அவரை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டதில் அவரது நிலை ஸ்திரமாக உள்ளதென அவர் தெரிவித்தார்.

கடல் கடந்த ஊடகங்கள் சாயோ ஷியாங் கடந்த எட்டாம் திகதி உயிரிழந்து விட்டதாக செய்திகள் வெளியிட்டிருந்தன. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதெனவும் அவர் தெரிவித்தார்.

சிறையிலுள்ள சாயோ சுவாச நோயினால் அவதிப்பட்டு வருவதாக ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்டியங்கும் மனித உரிமை அமைப்பின் பிராங் லூ, பீஜிங்கிலுள்ள சாயோவின் மகளை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளார்.



## நிவாரணப் பொருள் திருடியவர் பிடிபட்டார்!



கடந்த 26 ஆம் திகதி இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி அலைகளால் ஆயிரக்கணக்கானவர்கள் வீடு வாசல்களை இழந்து தவிக்கிறார்கள். பண்டா ஆசி பகுதியில் அதிக சேதம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய நிவாரணப் பொருட்களில் செல்போன் உட்பட சில பொருட்களை ஒருவர் திருடிவிட்டார்.

திருடியவரை முகாம்களில் தங்கியிருந்த குழந்தைகளே பிடித்து கட்டிவைத்தனர். திருடர் என்று எழுதப்பட்ட அட்டையையும் அந்த நபரது கழுத்தில் தொங்கவிட்டனர். அவ்வப்போது தர்ம அடியும் விழுந்தது.

இவ்வாறு பொருள் திருடியவரே படத்தில் உள்ளார்.




## நடுக்கடலில் 8 நாள் தத்தளித்து மீண்ட இந்தோனேஷியப் பிரஜைக்கு மலேஷிய அரசு அடைக்கலம்

சுனாமி பேரலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு நடுக்கடலில் 8 நாட்கள் மரப்பலகையைப் பிடித்துக்கொண்டு தத்தளித்து உயிர் மீண்ட இந்தோனேஷியர் ரிசால் ஷாபுத்ராவுக்கு மலேசியா அடைக்கலம் அளிக்க முன்வந்துள்ளது.

சுனாமி பேரலைகள் தாக்கிய டிசெம்பர் 26 ஆம் திகதி, இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் உள்ள பண்டா அசெ நகரில் ஒரு மசூதியை துப்புரவு செய்து கொண்டிருந்தார் ரிசால் ஷாபுத்ரா.

திடீரென அலறி அடித்துக்கொண்டுவந்த குழந்தைகள் - கடல் கொந்தளித்து பேரலைகள் சீறி வருவதாகக் கூச்சலிட்டுக்கொண்டே ஓடினர்.

ஆனால் தப்பிக்க முனைவதற்குள் அந்த அசுர அலைகள் அனைவரையும் கடலுக்குள் இழுத்துச் சென்றுவிட்டன.

மிதக்கும் மரப்பலகைகளைப் பிடித்துக் கொண்டு ரிசால் ஷாபுத்ரா 8 நாட்கள் நடுக்கடலில் உயிருக்குப் போராடினார்.

அந்த வழியாகச் சென்ற ஜப்பானிய சரக்குக் கப்பல் எம்.வி.டர்பன் பிரிட்ஸ் கடந்த 3 ஆம் திகதி அவரைக் காப்பாற்றியது.

சொந்த ஊரான பண்டா அசெக்குத் திரும்பிச் சென்றால், அங்கு தனக்கு யாரும் இல்லை எதுவும் இல்லையென நிருபர்களிடம் வேதனையுடன் கூறினார்.

இந்த நிலையில், அவர் மலேசியாவில் தங்கவும் வேலை பார்க்கவும் அனுமதிக்கப்படுவாரென மலேசிய உள்துறை அமைச்சர் ஆஸ்மீ காலித் தெரிவித்துள்ளார்.

## சுனாமியிலிருந்து தப்பிய 11 பேர் 15 நாட்களின் பின் மீட்கப்பட்டனர்

(புதுடெல்கி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நிகோபர் தீவில் 11 பழங்குடியினர் 15 தினங்களுக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சுனாமி அலை தாக்கியபோது அவர்கள் ஒரு மரத்தில் தஞ்சம் புகுந்தனர். மரத்தைக் கட்டிப்பிடித்த நிலையில் இருந்துகொண்டு மரணத்திலிருந்து தப்பினர். அருகில் இருந்த, சுனாமியால் தப்பிய தென்னை மரத்திலிருந்து பெறப்பட்ட தேங்காய், இளநீரைச் சாப்பிட்டு பசியாறினர்.

டெல்கியிலிருந்து வந்திருந்த பொலிஸ் மீட்புப்படை கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்களைக் கண்டுபிடித்து பத்திரமாக மீட்டது.

இந்தப் படையின் தலைவர் ஓம்வீர் சிங் கூறியதாவது -

கெம்பல் பே பகுதியில் மீட்புப் பணிக்காக நாங்கள் அனுப்பப்பட்டிருந்தோம். ஒரு கட்டத்தில் அங்கு உயிருடன் யாருமே இல்லையென்று விமானப்படை, இராணுவம் அறிவித்தது. எனினும், தேடிப்பார்ப்போமே என்று தோன்றியது. ஞாயிற்றுக்கிழமை காலை அங்கு சென்றோம்.

லூனார் என்ற கிராமத்தில் பல இடங்களில் தேடியபோது, பிற்பகல் சுமார் 2.30 மணிக்கு ஒரு மரத்துக்குப்பின் 11 பழங்குடியினர் உயிருடன் இருப்பதைக் கண்டோம். அவர்களைப் பத்திரமாக மீட்டோம் என்றார் ஓம்வீர் சிங்.

ஒவ்வொரு தினமும், மீட்புப் படை வருமென எதிர்பார்த்து ஏமாற்றமே மிஞ்சியது என்றாலும்கூட, 'இன்னமும் சில நாட்கள் பார்ப்போம், யாராவது கட்டாயம் வருவர்' என்ற உள்ளுணர்வு அந்த 11 பேரையும் இறுதிவரை கைவிடவில்லை. இந்த 11 பேரில் மத்தியூ என்பவரது மனைவியும் இரு குழந்தைகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டனர்.

## பலஸ்தீன ஜனாதிபதி தேர்தல்; அபாஸ் பெருவெற்றி பெற்றார்



பலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் மறைவைத் தொடர்ந்து, புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஜனாதிபதி தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலஸ்தீனத்தில் நடைபெற்றது.

பதிவுசெய்யப்பட்ட 12 லட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்களில் 70 சதவீதம் பேர் வாக்களித்தனர்.

இரவு 9 மணிவரை இந்த வாக்களிப்பு நடைபெற்றது. அதன்பின்னர் வாக்கு எண்ணும் பணி தொடங்கியது.

62.32 சதவீதம் பேரின் ஆதரவைப் பெற்று மக்மூத் அபாஸ் வெற்றிபெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முஸ்தபா பர்கத் உட்பட 6 பேர் தோல்வியடைந்தனர்.

யாசிர் அரபாத்துக்கும், இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பலியான பலஸ்தீனர்களுக்கும் தனது இந்த வெற்றியைக் காணிக்கை ஆக்குவதாக மக்மூத் அபாஸ் கூறியுள்ளார்.

## தமிழகப் பொலிஸாரால் விஜயேந்திர சுவாமி கைது!



(சென்னை)

சங்கரராமன் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயேந்திரருக்கு உச்சநீதிமன்றம் பிணை அனுமதி வழங்கித் தீர்ப்பளித்த சில மணி நேரத்தில் பொலிஸார் சங்கரமடத்திற்குள் புகுந்து இளைய சுவாமிகளான விஜயேந்திரரைக் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் திடீரென சங்கரமடத்திற்குள் புகுந்த பொலிஸார் விஜயேந்திரரைக் கைதுசெய்து அவர் வழமையாகப் பயன்படுத்தும் வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட விஜயேந்திரர் காட்டு பங்களாவிற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பொலிஸாரால் எந்தப் பிரிவின் கீழ் விஜயேந்திரர் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரியவில்லையென தகவல்கள் தெரி த்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தொழில் உபகரணங்களை வழங்கவேண்டும்

## வடமராட்சி கடற்தொழிலாளர் சம்மேளன செயலாளர் தெரிவிப்பு

அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்படுவதாக கூறிய நிவாரணப்பொருட்கள் எவையும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் மக்களை நிரந்தரமாக குடியமர்த்தவும், நவீன கடற்றொழில் உபகரணங்களை பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீனவருக்கும் மானிய அடிப்படையில் அரசு கட்டாயம் வழங்க முன்வரவேண்டும் என, வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன செயலாளர் சூரியகுமார் தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் - சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது 16 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். 70 வீதத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளில் மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்கு உடனடியாக அடிப்படை சுகாதார குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நீண்டகால திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

இதற்கமைய கடற்கரையில் இருந்து 50 மீற்றர் தொலைவில் கல்வேலியை சீரமைத்து கடல் நீருக்கு மேல் குறைந்தது 4 அடி உயரத்திலாவது கல்வேலி அமைக்க வேண்டும். கரையோரக் கட்டுக்களை பலப்படுத்தி அவற்றின் உயரத்தை குறைந்தது ஆறு அடிக்கு மேலாவது உயர்த்த வேண்டும் இவ்வாறு செய்தால்தான் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

வடமராட்சிப் பகுதியில் ஏற்பட்ட உயிர், சொத்து இழப்பு தொடர்பான சரியான தகவல்களை திரட்டும் பணியில் மும்முரமாக செயற்பட்டு வருகின்றோம். எமது பகுதிகளில் உள்ள சில கிராம சேவகர்களின் அசமந்தப்போக்குகள் காரணமாக செயலகத்தில் நிவாரணப் பணிகளில் தேங்கிக் கிடப்பதாக அறியமுடிகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும்.

எமது மக்களுக்கு உடனடி உதவிகளை தொடர்ச்சியாக செய்து வரும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையை சேர்ந்தவர்களுக்கும், உதவிகளை செய்து வரும் பொது மக்களுக்கும் நன்றி உடையவர்களாக நாம் இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் யோசனைகளையும் ஜனாதிபதி பரிசீலிப்பாராம்!

வடக்கு-கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்புவதற்காக விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்படும் யோசனைகளை தாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நிவாரணப் பணிகள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குடியிருப்புகளை இழந்தவர்களுக்கு 6 மாதங்களுக்குள் புதிய வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படும். இலவசமாக மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்படும். 200 மீற்றர் எல்லைக்குள் கட்டடங்கள் அமைப்பதற்கு கடற்கரைப் பிரதேசத்தில் எக்காரணம் கொண்டும் அனுமதியளிக்கப்படமாட்டாது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திடீரெனப் பதவி நீக்கம்!

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயலாளர் டி.எஸ்.சிறிவர்த்தன நேற்றுமுன்தினம் முதல் அவரது பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் ஊடுருவி அர்த்தமற்ற வகையில் இந்தக் குழுவை நடத்திச் செல்வது குறித்து ஆணைக் குழுவின் தலைவர் ராதிகா குமாரசாமியுடன் ஏற்பட்ட வாய்த்தர்க் கத்தையடுத்தே தான் பணியிலிருந்து நீக்கபபட்டதாக சிறிவர்த்தன தெரிவித்தார்.

கடந்த ஏழாம் திகதி நடைபெற்ற அவசர பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தலைவருக்கும், செயலாளருக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டதாலேயே செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கலாமென ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் கடமைக்குச் சென்ற செயலாளரிடம் அனைத்து நடவடிக்கையிலிருந்தும் விலகி அவரது சகல கடமைப் பொறுப்புக்களையும் பிரதிச் செயலரிடம் ஒப்படைக்குமாறு குறிப்பிடும் கடிதம் கையளிக்கப்பட்டது.

இதன்படி நேற்று முன்தினம் தொடக்கம் ஆணைக்குழுவின் புதிய செயலராக திருமதி விமலரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை முன்னாள் செயலர் தனக்கு நேர்ந்த இந்த நிலை தொடர்பாகச் சட்டநடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளார். (தே)

### இலங்கை...

ரண கணக்கில் இதுவரை 15 மில்லியன் அமெரிக்க டொல்ர்கள் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பால் அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் ப்வுண், யூரோ ஆகிய வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் தங்கம் ஆகியவற்றின் பெறுமதி கடந்த சில நாட்களாக மிக வேகமாகச் சரியத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புலிகளுக்கு...

கைப்பற்றியுள்ளதாகவும் ஜே.வி.பி சார்பு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கைப்பற்றப்பட்ட இந்த இரண்டு பிளேன்களும் ஆறு தொன்டையுள்ள பொருட்களை கொண்டு செல்லக்கூடியவை.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இவை தரையிறங்க முற்பட்ட வேளையே விமானப்படையினர் இவற்றை கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட இந்த இரண்டு விமானங்களையும் விமானப்படையினரின் மேற்பார்வையில் உதவிப்பணிகளில் ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீள்குடியேற்றம் குறித்த அறிக்கை சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள மீள் குடியேற்ற பணிகள் தொடர்பான அறிக்கையொன்று இலங்கை அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப 15,600 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி தேவைப்படுவதாக அந்த அறிக்கையில் இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சு ஆகியன கூட்டாக இணைந்து இந்த அறிக்கையை தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதியில் வீடுகளை அமைப்பதற்கும் நிர்மாணப் பணிகளுக்கும் 400 மில்லியன் டொலர் தேவைப்படும் எனவும் அரசாங்கம் 12 பெரிய நகரங்களையும் 20 மத்திய மற்றும் 30 சிறிய நகரங்களையும் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேலும்...

அனர்த்தம் இடம்பெற்று இரண்டு வாரங்களாகிவிட்ட நிலையிலும் சடலங்கள் தொடர்ந்தும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவத்தில் 15 ஆயிரம் பேர் காயமுற்றதுடன் 4 லட்சத்து 82 ஆயிரத்து 531 பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

இவர்களில் 2 லட்சத்து 87 ஆயிரத்து 219 பேர் நலன்புரி முகாமகளில் வசித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் மக்களுக்கு சர்வதேச...

கனடியப் பிரதமரின் பயணம் என்பது மனிதாபிமான ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் சகல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களின் மனங்களைப் பாதிக்காத வகையில் அவரது பயணம் இடம்பெறவேண்டும்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் அளித்துச் செல்வதை ஓர் அங்கமாகக் கொள்ள வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. தமிழ் மக்களின் விருப்பமும் அதுவே. இதுதொடர்பாக கனடா தூதரகம் மூலம் தமிழ்மக்கள் சார்பாக அழைப்பு விடுத்துள்ளோம். கனடா பிரதமர் தமிழர் பகுதிக்கு வருவார் என்று நம்புகிறோம்.

அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகளும் தென்னாசியாவின் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளும் மனிதாபிமான உதவிகளைப் புரியவந்தவர்கள் என்ற அடிப்படையில் தான் பார்க்கிறோம். இதை நாம் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டிய தேவை இந்தக் கட்டத்தில் இல்லையென்று நான் கருதுகிறேன்.

இலங்கை அரசாங்கம் எம்முடன் இணைந்து மனிதாபிமானப் பணியாற்றத் தயார் என்று அறிவித்துக்கொண்டு இருக்கின்றதே தவிர, ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

பாதிக்கப்பட்டு, அவலப்பட்டு பெரும் எதிர்பார்ப்போடு நின்ற தமிழ் மக்களுக்கு தீர்வைத் தரக்கூடிய அணுகு முறைகளை மேற்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் ஒரு பிரசார நடவடிக்கையாகவே அனைத்தும் இருக்கிறதே ஒழிய எங்களுடைய பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளோ, புனர்வாழ்வுப் பணிகளோ, உடனடி மனிதாபிமானப் பணிகளோ திறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆக்கபூர்வமான நடைமுறை ஒழுங்குகளை ஏற்படுத்தவில்லை.

போதிய அளவில் தமிழ்ப் பகுதிகளுக்கு உதவிகள் வந்ததென்று சொல்லமுடியாது. ஏனெனில் தெற்கிற்கு அனுப்புகிற தொகையைவிட அதிகமாக இங்கு அனுப்பப்பட்டது என்பதை எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இங்கே எல்லாம் பகிரங்கமாக இருக்கிறது. அனைத்துப் பத்திரிகையாளர்களும் வரலாம். அனைத்து சர்வதேச பிரதிநிதிகளும் வரலாம். நேரடியாக மக்களிடம் கேட்கலாம். இங்கு இடம்பெறும் நர்வாகம், ஒழுங்கமைப்புகள் வெளிப்படையான முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எவரும் இங்கே வந்து நேரடியாகப் பார்க்கலாம்.

சுனாமி எல்லா இன மக்கள் மத்தியிலும் ஏற்படுத்திய பாதிப்பைப் பயன்படுத்தி, அரசாங்கம் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் தமிழ் மக்களையும், புலிகளையும் பார்த்து அவர்களுடன் இணைந்து இந்த மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பு சகல மட்டத்திலும் இருந்தது.

ஆரம்பத்தில் அதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால், எவ்வித நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத இடத்து - குறிப்பாக சர்வதேச சமூகத்தின் உதவிகளை தெற்கிற்கு வழங்குகின்ற அளவை பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் வடக்கு கிழக்கு பகுதிக்கு அதைப் பகிர்ந்தளிக்கும் எவ்வித முயற்சிகளும் இல்லாத காரணத்தினால், தமிழ்மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள்.

ஒட்டுமொத்தமாக நம்பிக்கையற்றிருந்த சமாதான முயற்சிகள் மீண்டும் துளிர்க்கும் என்ற நம்பிக்கை துளி எல்லாவற்றையும் சிதறடிக்கும் வகையில் அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தலைமைப்பீடம் தனது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகள் வலிந்து யுத்தத்தைத் திணிக்கமாட்டார்கள். அரச படைகள் தமிழ்மக்கள்மீது வலிந்து போரைத் திணிக்கமுயன்றால் மக்களைக் காக்கப் போரை எதிர்கொள்ளவேண்டிய கடப்பாடு புலிகளுக்குண்டு. அந்த வகையில் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் என்று ஒரு தரப்பின் நிலைப்பாட்டை வைத்துக்கொண்டு கூறமுடியாது.

இரண்டு தரப்பின் நிலைப்பாடாக உள்ளது. ஆகவே இலங்கை அரசும் படைகளும் நடந்து கொள்கின்ற நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தீர்மானிக்கலாம் எனத் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு – அம்பாறை....

இதனைத் தவிர இந்திய இராணுவத்தினர் தற்போது திருகோணமலையிலும். பிரித்தானிய இராணுவத்தினர் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் நிவாரணப் பணிகளுக்காக நிலைகொண்டுள்ளார்கள்.

இதேவேளை கனடிய இராணுவ பொறியியலாளர் மற்றும் மருத்துவ குழுவைச் சேர்ந்த 200 பேர் கொண்ட குழுவொன்று அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கனடா மனிதாபிமானப் பணிகளுக்காக 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்ரபோல் செயலர்...

இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

சுனாமி கடற்கொந்தளிப்பினால் உயிரிழந்தவர்களை இனங் காண்பது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இன்ரபோல் தயாராகவுள்ளது. சடலங்களை இனங்காண்பதற்குத் தேவையான உபரணங்களை விரைவில் வழங்கவுள்ளோம். இதன்மூலம் உயிரிழந்தவர்களை அடையாளம் காண முடியும்.

அத்துடன் உயிரிழந்தவர்கள் குறித்த விசாரணைகளையும், தகவல்களையும் வழங்குவது குறித்து பொலிஸாருக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி நிவாரணங்களைத் தாங்கி இதுவரைக்கும் 192 விமானங்கள் கட்டுநாயக்கவுக்கு வந்து சென்றுள்ளன.

இதில் யுத்த உபகரணங்களுடன் வருகைதந்த 22 அமெரிக்க விமானங்களும் அடங்குமென கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (01)

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 97.40 | 99.11 |
| ஸ்ரேலிங் பவுண் | 182.61 | 186.75 |
| யூரோ | 127.36 | 130.58 |
| சுவிஸ் பிராங் | 82.17 | 84.81 |
| யென் | 0.9318 | 0.9575 |

## மரண அறிவித்தல்

### ஆறுப்பிள்ளை சின்னத்தம்பி

(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் சங்கோலையை வதிவிடமாகவும், கோண்டாவில் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை சின்னத்தம்பி 11.01.2205 செவ்வாய்க்கிழமை (நேற்று) காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.01.2005 (இன்று) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்* (இ)

தகவல் :
மகன்(வசந்தன்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.